# இறையியல் கோலங்கள்

வடிவம் 28 ஜூலை – டிசெம்பர் 2012 வண்ணம் 2

இதழின் இறையியலாளர்

யாவருக்கும் மறைக்கல்வியின் அவசியம்...

மறைக்கல்வியில் கலைவடிவங்கள்

வளர்ந்தோர் மறைக்கல்வியில்...

மறை ஆசிரியரும் உருவாக்கற் பயிற்சியும்

சமூக ஊடகங்கள் வழி மறைக்கல்வி...

Tution வகுப்புக்களும்...

இளையோர் மறைக்கல்வியின் அவசியம்

மறையாசிரியர் ஜெயசீலன் அவர்களுடன்...

தூய சவேரியார் குருத்துவக் கல்லூரி வெளியீடு

# இறையியல் கோலங்கள்

## தமிழ் இறையியல் அரையாண்டு இதழ்

# IRAI IYAL KOLANKAL


| | | |
|---|---|---|
| Vol | : | 28 |
| No. | : | 2 |
| July - December | : | 2012 |
| வடிவம் | : | 28 |
| வண்ணம் | : | 2 |
| ஜூலை - டிசெம்பர் | : | 2012 |

புனித சவேரியார் குருத்துவக் கல்லூரி,
கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்,
இலங்கை.

ஆசிரியர்: அருட்தந்தை மை.ஆ.போ.ற.சவுந்தரநாயகம்

துணை ஆசிரியர்கள்: அருட்தந்தை அ.யோ.ஜெயசீலன்
அருட்தந்தை தே. ரவிராஜ்

நிர்வாகக்குழு: அருட்சகோ. ஆ. ஸ்கரன்ராஜ்
அருட்சகோ. இ. அன்ரனி சோசை
அருட்சகோ. ம.சதாஸ்கர்
அருட்சகோ.பி.ஜோண் றெக்சன்
அருட்சகோ. றி.ஒ. ரெறன்ஸ்
அருட்சகோ. அ. துஷ்யந்தன்

வெளியீடு: தூய சவேரியார் குருத்துவக் கல்லூரி,
கொழும்புத்துறை,
யாழ்ப்பாணம், இலங்கை.

Editor: Rev.Fr.M.A.P.R. Savundranayagam

Sub Editors: Rev. Fr. A.J. Jeyaseelan
Rev. Fr. T.Raviraj

Administrative Board: Rev. Bro. A. Skaranraj
Rev. Bro. I. Antony Sosai
Rev. Bro.M.Sathaskar
Rev. Bro.P.John Rexon
Rev. Bro.R.O.Terence
Rev. Bro.A.Thushyanthan

Publication: St. Francis Xavier's Seminary,
Columbuthurai, Jaffna, Sri Lanka.
Tel. No.: 021 222 2482, 021 222 7145

# உள்ளே


◈ ஆசிரியர் உரை

◈ இதழின் இறையியலாளர்
அருட்சகோ. அ. டெனிசியஸ்

◈ யாவருக்கும் மறைக்கல்வியின் அவசியம்...
அருட்பணி. ஏ.ஜே.மவுலிஸ்

◈ மறைக்கல்வியில் கலைவடிவங்கள்
அருட்பணி. நீ. மரியசேவியர்

◈ வளர்ந்தோர் மறைக்கல்வியில்...
திரு. க. அந்தோனிப்பிள்ளை

◈ மறை ஆசிரியரும் உருவாக்கற் பயிற்சியும்
அருட்பணி. நேசராஜா

◈ சமூக ஊடகங்கள் வழி மறைக்கல்வி...
அருட்பணி. ரூபன் மரியாம்பிள்ளை

◈ Tution வகுப்புக்களும்...
செல்வி. என். எப். றஞ்சினி

◈ இளையோர் மறைக்கல்வியின் அவசியம்
அருட்பணி. B.பிறாயன்

◈ மறையாசிரியர் ஜெயசீலன் அவர்களுடன்...
அருட் சகோ. வே. ஜஸ்ரீன் அமதி

◈ SYNOPSIS

◈ பொன்விழா பொக்கிஷங்களே...

## ஆசிரியர் உரை

மறைக்கல்வியின் அவசியம் பற்றிய திருச்சபையின் நிலைப்பாட்டை இறைமக்கள் ஆழமாக உணர வேண்டும் என்ற விருப்பத்தோடு, தமிழ் பேசும் மக்களை அதிக அளவில் கொண்டிருக்கின்ற மறைமாவட்டங்கள் பிரகடனப்படுத்தி யிருப்பதுதான் மறைக்கல்வி ஆண்டு. இந்த இதழிலே, யாவருக்கும் மறைக்கல்வியின் அவசியம் பற்றி திருச்சபையின் ஏடுகளில் இருந்து மௌலிஸ் அடிகள் தேர்ந்தெடுத்து எழுதி நம் கவனத்தை ஈர்க்க இளையோர் மறைக்கல்வியின் அவசி யத்தை பிராயன் அடிகள் கோடிட்டுக் காட்டுகின்றார். மறைக் கல்வியில் கலைவடிவங்கள் எவ்வாறு பெருந்துணை புரியும் என்பதை மரிய சேவியர் அடிகள் எடுத்துக்காட்டுகிறார். மறைக் கல்விச் சேவையிலே தம்மை அர்ப்பணிக்கும் மறை ஆசிரியர்களின் முக்கியத்துவம் பற்றியும் அவர்களுக்கான உருவாக்கல் பற்றியும் நேசராஜா அடிகள் விபரிக்கின்றார். மாணவர்களின் மறைக் கல்விக்குப் பெரும் சவாலாக அமையும் "ரியூசன்" (Tuition) வகுப்புக்கள் பற்றி ஆசிரியர் செல்வி றஞ்சினி அவர்கள் இரத்தினச் சுருக்கமாக எடுத்துரைக்கின்றார். வளர்ந்தோருக்கும் தொடர்ந்து மறைக்கல்வி அளிப்பதற்கு ஒரு வழிவகையாக துண்டுப்பிரசுரப் பாவனையை முன்வைக்கிறார் மறை ஆசிரியர் அந்தோனிப்பிள்ளை அவர்கள். மறைக்கல்வி அறிவிப்புக்கு நவீன சமூக ஊடகங் களைப் பயன்படுத்துவது இன்றியமையாதது என்ற கருத்தை ரூபன் மரியாம்பிள்ளை அடிகள் வலியுறுத்துகின்றார். இந்த சிறப் பான ஆக்கங்கள் மறைக்கல்வி ஆர்வலர்களுக்கு இன்னும் அதிக ஊக்கத்தைத் தரும் என்பதில் ஐயம் இல்லை. ஆக்கங்களைக் கவனமாகப் படித்து பயன் உள்ளவற்றை பிறருடன் பகிர்ந்து கொள்ள இறை ஆசீர் துணை நிற்பதாக!

M.A.P.R. சௌந்தரநாயகம்
(அதிபர்)

## இதழின் இறையியலாளர்

# புனித பீற்றர் கனிசியஸ்

அருட் சகோ. அ. டெனிசியஸ்

முன்னுரை



இரண்டாம் வத்திக்கான் சங்கத்தின் 50ம் ஆண்டின் நிறைவில் நின்று தலைத் திருச்சபையின் வேண்டுகோளுக்கு அமைய "விசுவாசத்தின் ஆண்டை அனுசரிக்கின்றபோது அதற்குப் பொருத்தமாக, திருச்சபையின் விசுவாசப் பயணத்துக்கு உறுதுணையாக இருந்த ஒரு புனிதரை நாங்கள் சற்றுப் பார்ப்பது பொருத்தமானது.

நாங்கள் எப்போதும் உண்மையைத் தேடுவோருக்காகச் செபிப்போம் என்ற விருதுவாக்கோடு உண்மையின் உருவான இறைவனின் விசுவாசத்தை இப்புவியில் நிலைக்கச் செய்ய இறைவனால் விசேடமாக தெரிந்து கொள்ளப்பட்டவர் தான் புனித பிற்றர் கனிசியஸ்.

ஆரம்பகாலம்

தாயின் கருவினில் உருவாகும் முன்பே உன்னை பெயர்சொல்லி அழைத்தேன் என்ற இறைவார்த்தைக்கு அமைய சிறுவயது முதலே சிறந்து விளங்கிய எம்புனிதர் லூதர் திருச்சபையை விட்டு வெளியேறிய அதே ஆண்டான 1521 ம் ஆண்டு பெரும் பணம் படைத்த குடும்பத்தில் சுவிஸ் தேசத்தில் பிறந்தார். 15ம் வயதினிலே தனது பல்கலைக்கழகப் பட்டப்படிப்பை ஆரம்பித்து 19ம் வயதில் பட்டதாரியாகினார். மேலும் தனது 22ம் வயதில் இறை அழைப்பினை உணர்ந்து ஜேர்மன் தேசத்தின்




முதலாவது இயேசுசபை அங்கத்தவராகத் தன்னை இணைத்துக்கொண்டார். இவர் 1546ம் ஆண்டு குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்டார்.

பணிக்காலம்

ஏற்கனவே சிறந்த இறையியல் வல்லுனராக இனங்காணப்பட்ட எம் புனிதர் திரித்தெந்தில் இடம்பெற்ற திருச்சங்கத்தில் திருச்சபையின் இறை விசுவாசத்தை நிலைநிறுத்த உழைத்தார். பின்னர் சபைத்தலைவராம் புனித இக்னேசியஸ் லோயலா அவர்களால் றோமைக்கு அழைக்கப் பட்டு சிசிலிக்கு சென்று மறை அறிவினை கற்பிக்கப் பணிக்கப்பட்டார். இதன் தொடர்ச்சியாக 20 வருடங்கள் பல்வேறு நிலைகளில் இறைபணி புரிந்து இறைவிசுவாசத்தை நிலைநிறுத்தப் பெரும்பாடுபட்டார்.

ஆயினும் தப்பறையான போதனைகளால் றோமன் கத்தோலிக்க மதத்தை விட்டு இறைமக்கள் வெளியேறுவதைக் கண்ட எம் புனிதர் அந்த நிலையை மாற்ற அதற்காகத் தன்னை முழுமையாக தயார் செய்து அந்தப்பணியில் தன்னை முழுமையாக ஈடுபடுத்தினார். அவரது முன்மாதிரிகையான பணிவு, சமநிலையான தன்மை போன்றவை அவரை சிறந்த எடுத்துக் காட்டானவராக அவர் பணிபுரிந்த இடங்களில் நிலைநிறுத்தியது. இந்த நிலை அவரை புனித பொனிபசை தொடர்ந்து ஜேர்மனியின் 2ம் அப்போஸ்தலர் என்ற நிலைக்கு உயர்த்தியது.

தனது பணிக்காலத்தில் மறை அறிவினை மக்கள் மத்தியிலே வளர்க்க பெரிதும் பாடுபட்ட எம் புனிதர் செபமாலை பக்தியை வளர்க்க பெரும்பாடுபட்டார். மேலும் நல்ல எழுத்துருவாக்கங்கள், புத்தகங்கள் வெளிவரவும் அதனோடு மறை அறிவு வளரவும் உதவினார். அதுமட்டுமன்றி முப்பதிற்கும் அதிகமான பாடசாலைகள் பாப்பரசரின் குருமடங்கள் போன்றவற்றை ஆரம்பித்து அவற்றினூடாக தரமான, ஆர்வம் மிக்க இறைபணியாளர்களை உருவாக்கினார். இவற்றோடு பாவசங்கீர்த்தன அருட்சாதனம் கேட்பதனூடாக ஆயிரக்கணக்கான மக்களின் மனதை



வென்றதோடு அவர்களை புனிதர்களாக இறைவனிடம் அழைத்துச் சென்றார். இவருடைய மறைபணியில் மற்றொரு குறிப்பிடவேண்டிய விடையம் அவரது திருமறை (catechism) என்ற மறை அறிவு நூலாகும். திருச்சபையின் அனைத்து தரப்பனர்களுக்குமான மறை அறிவினை உள்ளடக்கிய அவரது இந்த நூலானது அவரது வாழ்கைக் காலத்திலேயே 200 பதிப்புகளையும் 12 ற்கும் மேற்பட்ட மொழிகளிலும் வெளிவந்தது.

இறுதிவரை இறைவனின் திராட்சைத் தோட்டத்தில் சிறந்த பணியாற்றிய எம்புனிதர் இறைவனின் மந்தையில் ஒரு ஆட்டினைக்கூட இழக்க விடக்கூடாது என்ற ஆர்வத்தோடு பணியாற்றினார். தனது பணிக்காக முற்றும் உழைத்த தனது பணியாளனை இளைப்பாற்ற 1597 ம் ஆண்டு மார்கழி 21ம் திகதி இறைவன் தன்னிடம் அழைத்துக் கொண்டார்.

## இறைமகிமை

தனக்காக வாழ்வு முழுவதும் கடினமாக உழைத்த தனது பணியாளனை இறைவன் இவ்வுலகில் மகிமைப்படுத்தினார். அதாவது 1925ம் ஆண்டு திருச்சபையின் புனிதர் நிலைக்கு இவர் உயர்த்தப்பட்டதோடு திருச்சபையின் மறைவல்லுனர் என்ற உயர் மகிமையையும் பெற்றார். இந்த இரு பட்டங்களையும் ஒரே வேளை பெற்ற முதல் புனிதர் என்ற பெருமையையும் பெற்றார்.

# யாவருக்கும் மறைக்கல்வியின் அவசியம் பற்றி திருச்சபையின் ஏடுகளிலிருந்து ஒரு கண்ணோட்டம்...

*அருட்பணி. ஏ.ஜே.மவுலிஸ்*

## முகவுரை

இலங்கையின் தமிழ் மறைமாவட்டங்கள் 2012ம் ஆண்டை மறைக்கல்வி ஆண்டாகப் பிரகடனப்படுத்தி யாவருக்கும் மறைக்கல்வி அளிப்பதில் கரிசனை செலுத்தி வருகின்றன. முத்திப்பேறுபெற்ற 2ம் யோவான் பவுல் "இக்காலத்தில் மறைக்கல்வி அளித்தல்" என்கின்ற அப்போஸ்தலிக்க அறிவுரையில் திருச்சபை மறைக்கல்வியை புனித கடமையாகவும், விட்டுக்கொடுக்கமுடியாத உரிமையாகவும் (இ.ம.அ 14) கருதி வந்திருக்கின்றதென்று கூறுகின்றார். ஒருபுறம் நம் ஆண்டவராகிய கிறிஸ்துவிடமிருந்து பெற்றுக்கொள்ளும் புனித கட்டளையாக திருச்சபை கருதி இப்பணியை மிகுந்த பிரமாணிக்கத்துடன் மேற்கொண்டுவந்தாலும், மாறிவரும் கலாச்சார சூழ்நிலைகளுக்கு ஏற்ப காலத்திற்கு காலம் திருச்சபையின் அதிகார பூர்வ சுற்றுமடல்கள், அப்போஸ்தலிக்க அறிவுரைகள் பொதுவழிகாட்டி ஏடுகள், கொள்கைத் திரட்டுக்கள் பெரிதும் உறுதுணையாக உள்ளன. இவற்றின் அடிப்படையில் ஒருசில சிந்தனைகளை இக்கட்டுரையானது தர விளைகிறது.

## மறைக்கல்வி – விசுவாசப்பயிற்சி

இக்காலத்தில் மறைக்கல்வி அளித்தல் நூலானது மறைக்கல்வியின் நோக்கத்தைப்பற்றி கூறுகையில் "தொடக்க நிலையிலுள்ள விசவாசத்தை இறைவனின் அருட் துணையால் வளர்ப்பதும், இளவயதினர், முதிர்வயதினரான விசுவாசிகளின் கிறிஸ்தவ வாழ்வுக்கு நாளுக்கு நாள் உணவூட்டி அதை நிறைவுக்கு கொண்டுவருதாகும் (இ.ம.அ 20) என்று கோடிட்டு காட்டுகின்றது. அதாவது தொடக்க அறிவிப்பில் பரிசுத்த ஆவி விதைத்ததும் ஞானஸ்நானத்தில் நிச்சயமாக அளிக்கபட்டதுமான விசுவாச விதைக்கு அறிவுமட்டத்திலும் வாழ்க்கை மட்டத்திலும் வளர்ச்சி அடையப்பண்ணுவது மறைக்கல்வியின் நோக்கமாக அமைகிறது. எனவே வாழ்க்கையின் பலவேறு மட்டங்களின் ஒரு கிறிஸ்தவன் எதிர்கொள்ளுகின்ற சவால்களை இறைவார்த்தையின் ஒளியில் புரியவைத்து விசுவாச வாழ்வில் வளர்த்தெடுப்பதை மறைக்கல்வி தனது குறிக்கோளாக கொண்டிருக்கிறது. மாறிவரும் கால, கலாச்சார சூழ்நிலைக்கேற்ப நமது நம்பிக்கையின் வாழ்வில் வளர்ச்சியும்,

முதிர்ச்சியும் பெறவேண்டும். இவ்வாழ்வுக்கு தூண்டுகின்ற பயிற்சியே மறைக்கல்வியாகும். ஒருவரின் விசுவாசம் முதிர்ச்சியடையும்போது அவர் கிறிஸ்துவில் உருவாகிறார். அவருள் கிறிஸ்துவும் கிறிஸ்து அவரிலும் இணைந்து வளர்கிறார்கள். "வாழ்வது நானல்ல கிறிஸ்துவே என்னுள் வாழ்கிறார்" என்ற பவுலடியாரின் கூற்று உண்மையாக்கப்படுகிறது.

## வரலாற்றில் மறைக்கல்வி

மறைக்கல்வி கத்திகேசிஸ் என்ற கிரேக்க மூலத்திலிருந்து பெறப்பட்டதாகும். அதாவது எதிரொலித்தல் அல்லது அறிவித்தல் என்பது பொருள்படும். கிறிஸ்துவிடமிருந்து பெற்ற செய்தியை இன்னுமொருவருக்கு வழங்குவதாகக் கொள்ளலாம். திருச்சபையின் வரலாற்றை உற்றுநோக்குகின்றபொழுது முதலாவதாக பெந்தகோஸ்தே அனுபவத்தைப் பெற்றுக்கொண்ட அப்போஸ்தலர்களின் மறைக்கல்வியானது இயேசுக்கிறிஸ்துவைப் போதித்து அவர் பெயரில் நம்பிக்கைபெற அழைக்கின்ற ஒரு முயற்சியாக அமைந்தது. திருத்தூதர்கால மறைக்கல்வியானது இயேசுவைப்பற்றிய நற்செய்தியில் நம்பிக்கைபெற வைத்து திருமுழுக்கு வழியாக திருச்சபையின் உறுப்பினராக ஆக்குவதைக் குறிக்கோளாக கொண்டிருந்தது. (மத் 28:19-20) திருச்சபைத் தந்தையர் காலத்தில் திருமுழுக்குப் பெற்றவர்களுக்கு கொடுக்கப்படும் ஒரு விசுவாசப் பயிற்சியாக அமைந்தது. தற்காலத்தில் கத்தோலிக்க கோட்பாடுகளை விளங்கிக்கொண்டு கத்தோலிக்க மரபில் பெற்ற செபங்களை மனனம் செய்து விளக்கம் பெறும் கல்வியாக இது அமைந்துகொண்டிருக்கிறது.
மறைக்கல்வி கத்தோலிக்க மறையைச் சார்ந்த உருவாக்கத்திற்கு மட்டும் பயிற்சியல்ல. மாறாக, மறைக்கல்வி வழியாக ஒருவர் தன் வாழ்வில் பெற்றுள்ள விசுவாசத்திற்கு விளக்கம் பெறுகிறார். தான் செபிக்கும் செபங்களுக்கு பொருள் புரிகின்றார். தான் நம்பியுள்ள மறையுண்மைகளுக்கும், விசுவாசக் கோட்பாடுகளுக்கும் விளக்கம் பெறுகின்றார். இவைகளை அனைத்தையும் முழு ஈடுபாட்டோடு கற்றுக்கொள்ளும் ஒருவர் 'முழு ஆளுமை வளர்ச்சி பெற்றவராக' மாறுகின்றார்.

## தற்கால மனிதனின் நிலைமை

இன்று மனித சமுதாயம் வரலாற்றிலேயே புதிய ஒரு கால கட்டத்தில் வாழ்ந்து வருகின்றது. இக் காலகட்டத்தில் ஏற்பட்டுள்ள ஆழ்ந்த விரைவான மாற்றங்கள் படிப்படியாக உலகம் அனைத்திலும் பரவி வருகின்றது. வத்திக்கான் சங்க ஏடான இன்றைய உலகில் திருச்சபை இவ்வகையான மாற்றங்களை அடையாளம் காண்பதோடு தற்கால மனிதன் இவ்வகையான மாற்றங்களுக்கு எவ்விதமாக முகம் கொடுக்கமுடியும் என கூறுகின்றது. ஒரு வகையில் மனிதர்களின் கூர்மையான அறிவினாலும், ஆக்கம், ஆற்றலினாலும் தூண்டப்பட்டவையே இத்தகைய மாற்றங்களென்று ஏற்றுக்கொள்வதோடு இவைகள் மனிதனையே திருப்பித் தாக்குகின்றன என்பதை கோடிட்டுக் காட்டுகின்றது. மனிதருடைய சமய வாழ்வு இத்தகைய தாக்கத்திற்கு உள்ளாகியிருக்கிறது. இதற்குப் பதிலளிக்கின்ற சங்கஏடு இம் மாறுகின்ற உலகில்

"நேற்றும் இன்றும் என்றுமே மாறாதவர் கிறிஸ்துவே" மனிதர் மீட்புப் பெறுமாறு வந்த கிறிஸ்துவிலே மனித வரலாறு முழுவதன் விளக்கமும் மையமும் முடிவும் காணக்கிடக்கின்றது என்று கூறுகின்றது. (இ.உ.தி 10) எனவே மனிதனின் மனதில் எழும் குழப்பமும் அவர்களின் வாழ்க்கைச் சூழலில் ஏற்பட்டிருக்கும் மாற்றமும் உலகில் நாம் காணும் மிக பரந்த மாற்றத்தோடு இணைந்துள்ளன என்பதை புரிந்துகொண்டு மறைக்கல்வியை சகல மட்டத்தினருக்கும் வழங்குவது காலத்தின் தேவையாக அமைகிறது. நாம் சவால்கள் நிறைந்த உலகில் வாழ்கின்றோம். மனிதன் சிறப்புடன் படைத்தவை அவனை விட்டு நழுவிப்போய் அவனுக்கு எதிராகத் திரும்புவதைக் காண்பதால் எழும் கடும் துயரம் நிலையில்லாத ஒரு சூழ்நிலையை உருவாக்கிக்கொண்டிருக்கின்றது. இத்தகைய உலகில் கிறிஸ்தவர் மகிழ்ச்சியோடு இருக்கவும், பிறருக்கு சேவை புரியவும் ஏற்றவாறு அவர்கள் ஒளியாகவும், உப்பாகவும் இருக்க மறைக்கல்வி உதவ வேண்டும். (இ.ம.அ. 57) மறைக்கல்வி கிறிஸ்தவர்களை அவர்களின் தனித்தன்மையில் உறுதிப்படுத்த வேண்டும். அவ்வப்போது உண்டாக்கப்படும் ஐயப்பாடுகள், நிச்சயமற்ற தன்மைகள், சுவை அற்ற தன்மை என்பவற்றை நீக்கி விசுவாசப் பயணத்தை தொடர்வதற்கு உதவவேண்டும்.

## யாவருக்கும் மறைக்கல்வி

பரிசுத்த தந்தை முத்திப்பேறுபெற்ற 2ம் யோவான் பவுல் இக்காலத்தில் மறைக்கல்வி அளித்தலில் குறிப்பிடுவது போல் அனைவருக்கும் மறைக்கல்வி (35-45) வழியாக மறுகிறிஸ்துவாக மாறுவது என்பது ஒரு தொடர் பயிற்சியாகவே இருக்கமுடியும். இக்கால சூழ்நிலை தொடர் விசுவாச தளர்ச்சிக்கு வழிவகுப்பதால் மறு கிறிஸ்துவாகும் பயிற்சியும் தொடர்ந்து நடைபெறவேண்டிய ஒன்றாக உள்ளது. குழந்தைகள், சிறுவர்கள், வளரும் இளவயதினர், இளையோர், மாற்றுதிறனாளிகள், ஆயத்த நிலையினர் போன்ற முதிர்வயதினர் என்று பல்வேறு நிலையில் உள்ள அனைவருக்கும் மறைக்கல்வி தேவையாயுள்ளது. குருக்கள், துறவியர், மற்றும் பொதுநிலையினர் ஆகிய அனைவருக்குமே மறைக்கல்விப் பயிற்சியானது தொடர்பயிற்சியாக உள்ளது. ஏனெனில் அனைவருமே தங்களது விசுவாசத்தில் தொடர்ந்து வளர்ந்து கொண்டே இருக்கிறார்கள்.

திருச்சபையின் முக்கிய மறைக்கல்வி ஏடுகளாவன, மறைக்கல்விப் பொதுவழிகாட்டி, இக்காலத்தில் மறைக்கல்வி அளித்தல் மற்றும் கத்தோலிக்க மறைக்கல்வி தொகுப்பேடு ஆகியவை எல்லாருக்கும் மறைக்கல்வியை வழங்குவது பற்றி வலியுறுத்துகின்றன. பல்வேறு நிலையினரின் நம்பிக்கை வளர்ச்சி என்பது அவரவர் காலத்திற்கேற்ப வாழ்க்கை அனுபவங்களைப் பொறுத்தே அமைகிறது. மறைக்கல்வி ஏடுகள் இத்தகைய நிலைகளை சுட்டிக்காட்டி நிற்கின்றன. அவையாவன 1. குழந்தைகள் 2. சிறார்கள், 3. இளையோர், 4. முதிர்நிலையினர், 5. வயதானோர், 6. மாற்றுதிறனாளிகள், 7. புறந்தள்ளப்பட்டோர், 8. சிறப்பு நிலையினர் எல்லா நிலையினரையும் யேசுக்கிறிஸ்துவை அறிவதோடு அவரோடு இணையவும் தனிப்பட்ட உறவில் வாழவும் மறைக்கல்வி வழிவகுக்கவேண்டும். (பொது ம.வ. எண்80)

# மறைக்கல்வியில் கலைவடிவங்கள்

- சில குறிப்புகள் -

*நீ. மரிய சேவியர் அடிகள்.*

உலக மூன்றினும் உவமை நீக்கிய
இலயை மூன்றினும் இழிவில் கன்னியாய்
அலகில் மூன்றினுள் நடுவ மைந்தனை
நிலவு மூன்றினும் நிறப்ப என்றனள்

வாய்ப்படா நுழை பளிங்கின் வாய்கதிர்
போய்ப்படாவொளி படரும் போன்றுதாய்
நோய்ப்படாதுஅருங் கன்னி நூக்கிலா
தாய்ப்படாவயத்து அமலன் தோன்றினான்

தேம்பாவணி
மகவருள் படலம்
பாடல்கள் 94:95

சொல்லோவியமாகிய இலக்கியக் கலை மூலம் மறை உண்மைகளை எப்படி அழகியலுடன் சேர்த்து விளக்கிக் கூறலாம் என்பதற்கு மேலே உள்ள இரு பாடல்களும் சிறந்த எடுத்துக் காட்டுக்கள். (பிள்ளை பெறுவதற்கு முன், பெறும் பொழுது, பெற்ற பின் பெண்களின் அழகில் மாற்றம் ஏற்படுவது இயல்பு. அப்படியல்லாது). "அழகு குன்றாது, கன்னிமைக்கு களங்கம் இல்லாது, மரியாள் இயேசுவைப் பெற்றெடுத்தாள்" என வீரமாமுனிவர் செப்புகின்றார். அது எப்படி என்ற கேள்விக்கு தூய பளிங்கு ஒன்றிற்குள் ஒளிபொருந்திய கதிர் பளிங்கின் வாசலைத் திறவாமலே உள் நுழைந்து ஒளிப்பிரதி விம்பத்தை உருவாக்குவது போன்று மரியாளும் எப்படிப்பட்டவள் என்பதையும் நயம்படக் கூறுகின்றார் ஆசிரியர்: அவர்களுக்கு ஒப்புவமை இல்லை. இறைவன் வரம்பில்லாப்(அலகிலா) பரம்பொருளாக உள்ளார். அவர் மூவராக உள் ளார். அம்மூவரில் இரண்டாவதாக இருப்பவரே (நடுவ மைந்தன்) மனு உருத்தரிக்கின்றார். இவ்வாறு, நற்செய்தியின் சில அடிப்படை உண்மைகள் இரு செய்யுள்களிலும் விளக்கப்பட்டிருப் பதைப் பார்க்கும்போது, மறை உண்மைகளைப் பயிற்றுவிப்பதற்கு இலக்கியக்கலை எவ்வாறு துணை புரியலாம் என்பதை உணர்ந்து கொள்ளலாம்.

மறையின் நெறிகளை, அந்நெறிகளின் காரணிகளையும் பண்பாட்டு பின்புலத்தையும், அவை தழுவிய தொடர் பொருண்மைகளையும், அறிவியல் முறையில் புகட்டுவது மறைக்கல்வி. அது, உலகின் மூலைமுடுக்கெல்லாம் நற்செய்தியை எடுத்துரைக்கவோ அல்லது அதற்கு சான்று பகரவோ வேண்டுமெனில், அதன் ஆழ அகலத்தை முறைப்படி கற்றுக் கொள்வது

இன்றியமையாதது. அக்கல்வியை இதமுடனும் சுலபமாகவும் கற்றுக் கொடுப்பதற்கும் உள்வாங்குவதற்கும் துணை நிற்பன கலைகள்.

ஒருபுறம், சமயத்துறையில், கலைகள் சமய உணர்வுகளினதும் உணர்ச்சிகளினதும் வெளிப் பாடுகளாக அமைகின்றன. ஓவியங்கள், சிற்பங்கள், இசைப்படைப்புக்கள், நாடகங்கள், காவி யங்கள் போன்ற கலைகள் சிறப்புமிக்க கலைநுட்பங்களுக்கு எடுத்துக்காட்டாகவும் அக்கலை களைப்படைக்கும் கலைஞர்களினதும் அவர்கள் வாழும் சூழல்களினதும் வெளிப்பாடுகளா கவும் விளங்குகின்றன. மறுபுறம், இத்தகைய கலைகளே சமயக்கொள்கைகளை சிறந்த முறையில் எடுத்துக் கூறப்பயன்படுகின்றன.

இயேசு நற்செய்தியை உவமைகள் மூலம் எடுத்துரைத்தார். கதை (உவமை) சொல்லும் கலைஇலக்கியப்பயன்பாடு அவருக்கு முன்பே மறைஅறிஞர்களால் கையாளப்பட்டிருந்தது. இயேசுவுக்கு பல நூற்றாண்டுகளுக்கு முன்பே திருமறை நூலின் திருப்பாடல்கள் வழக்கில் இருந்ததும் கவனத்திற் கொள்ளப்பட வேண்டும்.

இயேசுவினால் தூதுரைக்கப் பணிக்கப்பட்ட அடியவர்கள் சிலர், நற்செய்தியையும் மறை உண்மைகளையும் எழுத்து வடிவில் விட்டுச் சென்றனர். காலப்போக்கில் பல்வகைப்பட்ட கலைகளை நற்செய்தியைத் தூதுரைப்பவர்கள் பயன்படுத்தினர். இசை, ஓவியம், சிற்பம், நாடகம் போன்ற கலைகள் திருமறையின் மடியிலேயே ஊக்குவிக்கப்பட்டன. மக்களது இறைநம்பிக்கையினதும் பக்தியினதும் வெளிப்பாடாக பேராலயங்களும், வழிபாட்டு இடங்களும் கட்டடக்கலையால் எழுப்பப்பட்டன.

பதினோராம் நூற்றாண்டில் (1536-1541) வத்திக்கான் சிற்றாலயத்தில், மைக்கல் ஆஞ்ஜெலோ என்னும் உலகப்புகழ் பெற்ற கலைஞர் வரைந்த "நடுத்தீர்வை" என்னும் ஓவியமும், அதே கலைஞர் செதுக்கிய அன்னைமரி இறந்த தன்மகனை மடியில் வைத்திருக்கும் 'பியெற்றா' என்னும் சிற்பமும் காலத்தைக்கடந்து நிற்கும் மறைக்கல்விக் கலைக்கருவிகள். திருவழிபாட்டுக்கான திருஇசைப்பாடல்களும், நற்செய்திக்கொள்கைகளை எடுத்துக்கூறும் பொதுப்பாடல்களும் மறைக்கல்விக்கு சிறந்த கருவிகளாகப் பயன்படுத்தப் பட்டன. "மாண்புயர் இவ்வருள் அனுமானத்தை" என்னும் திருப்பாடலில் எத்தனை இறையியல் மெய்ம்மைகள் ஊறிக்கிடக்கின்றன.

நற்செய்தியை எடுத்துரைப்பதற்கு நம் மண்ணில் எடுத்து வைத்த ஐரோப்பிய குருக்கள் ஈழத்துக் கலை வடிவமாகிய நாட்டுக்கூத்தினை மறைக்கல்வி ஊட்டலுக்கு பயன்படுத்தினர் எனக் கொள்ள இடமுண்டு. அவர்களைத்தொடர்ந்து வந்த குரவர்களும் வெவ்வேறு நாடக பாங்குகள் ஊடாக சமயக்கருத்துக்களை பாமரமக்களும் அறிந்து கொள்ளும் வண்ணம் எடுத்துக் கூறுவதற்கு உந்துசக்திகளாக இருந்தனர் என்பதில் ஐயமில்லை.

இவ்வரலாற்றுப்பின்னணியில், சமகாலத்தில் கலைகளை நாம் மறைக்கல்வியில் எவ்வாறு பயன்படுத்தலாம் என்பதற்கு சில நிகழ்வுகளை இங்கே குறிப்பிடலாம்.

அறுபதுகளின் பிற்பகுதியில், உரும்பிராய் பங்கில் ஒவ்வொரு வெள்ளியும் அடுத்துவரும் ஞாயிற்றுக்கிழமையின் நற்செய்தி நாடகமாக நடிக்கப்பட்டு, அதைப்பற்றிய கேள்விகள்

கேட்கப்பட்டு, சிறந்த விடைகள் கூறியர்களுக்கு பரிசில்களும் வழங்கப்பட்டது பதிவு செய்யப்பட்டுள்ளது. நாடகக்கலை பல்வேறு வடிவங்களைத்தரித்து வரும் இக்காலகட்டத்தில், வெறும் போட்டிகளுக்காக மட்டுமன்றி, மறைக்கல்வியின் கூறுகளை விளங்கப்படுத்தவும் நாடகத்தை பயன்படுத்த வேண்டும்.

நாடகத்தைப்பற்றிக் குறிப்பிடும்போது, ஆடலையும் பாடலையும் கதையையும் பின்னிப்பி ணைந்து மறை உண்மைகளை எடுத்துரைக்கும் நடன நாடகம், அற்புதக் கலைகளாக மாறியுள்ளது. எடுத்துக்காட்டாக யாழ் நகரில் மேடையேற்றப்பட்ட "அருளும் இருளும்" என்னும் நாட்டிய நாடகத்தைக் குறிப்பிடலாம்.

மறைக்கல்வியை வளர்க்கும் நோக்குடன் யாழ் மறைக்கல்வி நிலையத்தால் ஆண்டுதோறும் நடத்தப்படும் ஓவியக் கண்காட்சிகள் பெரும் பலனைக் கொடுத்து வந்துள்ளது என்பதும் கவனத்திற் கொள்ளப்பட வேண்டியது.

இன்னும் ஓர் தளத்தில் பார்த்தால், திரைப்படத்தை மறைக்கல்விக்கு பயன்படுத்தின், கல்வியூட்டல் சுவையாகவும், நினைவில் நிற்கக்கூடியதாகவும் இருக்கும். இயேசுவின் வாழ்க்கைபற்றி வெளிவந்த வரலாற்று திரைப்படங்கள், திருமறை நூலின் சில பகுதிகளை எடுத்து விளக்கும் திரைப்படங்கள் மறைக்கல்விக்கு சிறந்த அழகியற் கலைகளாக மாறக்கூடிய ஆற்றல் படைத்தவை. மெல் கிப்ஸன் வெளியிட்ட "பாடுகள்" என்னும் திரைப்படம் இயேசுவின் திருப்பாடுகள் பற்றி அறிய விரும்புபவர்களுக்கு ஒரு சிறந்த விருந்து.

திருமறைநூல் முழுவதுமே பலபாகத் திரைப்படமாக வெளியிடப்பட்டிருப்பது மறைக்கல்வி யூட்டுபவர்களுக்கு ஓர் அருங்கொடை.

இரண்டாவது வத்திக்கான் பொதுச்சங்கம் "திருவழிபாடு" பற்றி கூறும் ஏட்டில், திரு இசையின் தேவை பற்றியும், திருவழிபாட்டு அழகியல் பொருட்களின் தன்மை பற்றியும், கலைஞர்கள் எவ்வாறு தமது படைப்பாற்றலை படைப்பிற்கே ஊற்றாம் இறைவனுக்கு அர்ப்பணிக்க வேண்டும் என்னும் கொள்கை பற்றியும் ஆணித்தரமாக எடுத்துரைத்துள்ளது. இறை வழிபாட்டுக்கான கலைகளும் கலைஞர்களும் ஊக்குவிக்கப்பட்டு, அக்கலைகளும் கலைஞர் களும் உருவாகுவதற்கான கல்லூரிகளும் கலைக்கூடங்களும் தலத் திருச்சபையால் நிறுவப்படல் இன்றியமையாதது என்றும் வற்புறுத்துகின்றது (அதிகாரம் 7:126) அதேபோல், சமூகத்தொடர்பாடல் ஏட்டில், நாடகம், திரைப்படம், செய்திமடல்கள் போன்றவற்றில் ஈடுபட்டுள்ள கலைஞர்கள் மனித மேம்பாட்டு நோக்குடன் தமது பணிகளைச் செய்ய வேண்டும் என்பதையும் கோடிட்டுக்காட்டுகின்றது. (6,11,14,15)

இவ்விரு ஏடுகளிலும் கலைகள், கலைஞர்கள் பற்றிக் கூறப்படுவதிலிருந்து கலைகளின் ஆற்றல், நோக்கம், பயன்பாடு பற்றி திருமறை கொண்டுள்ள நிலைப்பாடு பற்றி அறிந்து கொள்ளலாம். இந்தப்பின்னணியில், மறைக்கல்வி ஊடாக ஊட்டப்படும் மறைசார்ந்த உண்மைகள், ஒழுக்க நெறிகள், பண்பாட்டுக் கோலங்கள் பற்றி எடுத்தியம்புவதற்கு கலைகள் பெருந்துணை புரியும் என்பதில் ஐயமில்லை.

# வளர்ந்தோர் மறைக்கல்வியில் துண்டுப் பிரசுரப்பாவனை

*திரு. க. அந்தோனிப்பிள்ளை*
*(மறையாசிரியர்)*


CATHOLIC HERALD

CAN A SERVICEMAN REFUSE TO HANDLE NUCLEAR WEAPONS?

விஞ்ஞானத்தின் விந்தைகள் மத்தியில், தொழில் நுட்ப வளர்ச்சி உயர்வு கண்டு, வேகமாக உருண் டோடிக் கொண்டிருக்கும் இவ்வுலகத்திலே எங்கு பார்த்தாலும் புதிய புதிய உற்பத்தி பொருட்களுக்கான விளம்பரங்கள். உற்பத்தியாளர்கள் தாம் உற்பத்தி செய்யும் உற்பத்திப் பொருட்களை சந்தைப்படுத்துவதற் கான மிகச்சிறந்த முறையே இவ்விளம்பரங்கள் ஆகும். தற்கால உலகிலே "விளம்பரம் இல்லாமல் வியாபாரம் இல்லை" எனும் நிலையில் விளம்பரங்க ளானது பல்வேறு வடிவங்களில், குறிப்பாக பொது மக்கள் கூடுகின்ற இடங்களிலும், மற்றும் வானொலி, தொலைக்காட்சி போன்ற சாதனங்களிலும் சுவாரசிய மான முறையில், மக்களின் ஆர்வத்தை தூண்டக் கூடிய வகையில் அமைந்து விடுகின்றது. இவ்விளம் பரங்களானது துண்டுப்பிரசுரங்கள், போஸ்டர்கள், கட்டவுட் எனும் வடிவங்களில் சுவர்களில் ஒட்டப்பட்டும், தொங்கவிடப்பட்டும் காணப்படுவது மக்களை அவற்றை நோக்கி கவர்ந்திழுப்பது மட்டுமல்லாது அவற்றை வாங்கி அனுபவிக்கவும் செய்கின்றது என்றால் அது மிகையாகாது.

இத்துண்டுப்பிசுரப்பாவனையானது வெறுமனே வியாபாரத்துறையில் மட்டுமல்லாது, எந்தவொரு செயற்பாட்டையும் விளம்பரப்படுத்துவதற்கும், மற்றும் மக்களிடம் கொண்டு சேர்ப்பதற்கும் பயன்படுத்தப்படும் ஒரு ஊடகமாகவும் திகழ்கின்றது. அந்தவகையில் இப்பிர சுரங்கள் இயேசுக்கிறிஸ்து கொண்டுவந்த நற்செய்தியை உலகமெங்கும் பரப்புவதற்கும், மறைப்பணி புரிவதற்கும் ஒரு சிறந்த சாதனமாக விளங்குகின்றது. ஞானஸ்ஞானத்தின் மூலம் இறைவனின் இறையாட்சிப்பணியில் பங்குபற்ற அழைக்கப்பட்ட நாம் ஒவ்வொருவரும், அவரை அறியவும், ஆழமாக அன்பு செய்யவும் பணிக்கப்படுகின்றோம். இந்த வகையிலே மறைக்கல்வி ஆண்டாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ள இவ்வாண்டிலே அனைவருக்கும்

மறைக்கல்வி எனும் தொனிப்பொருளில் சிந்திக்க அழைக்கப்பட்ட எமக்கு, அம்மறையை அறிவிக்கும் பணியில் துண்டுப்பிரசுரங்களின் பாவனையானது மிகவும் தேவையானதும், உச்சப்பயனைப் பெறக் கூடியதாகவும் இருப்பது அனைவரும் அறிந்ததே.

இன்று வேகமாக உருண்டோடிக்கொண்டிருக்கும் உலகோடு போட்டிபோட்டு ஓடிக் கொண்டிருக்கும் எம்மில் பலருக்கு குறிப்பாக தொழில்துறைகளில், கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளில் இன்னும் பற்பல செயற்பாடுகளில் ஈடுபட்டுக்கொண்டிருக்கும் வளர்ந் தோருக்கு மறை அறிவை பெற்றுக்கொள்வதற்கு நேரம் ஒதுக்குவது ஒரு சிரமமான விடயமாகவே காணப்படுகின்றது. இந்நிலையில் அவர்களுக்கு ஏற்றால் போல் சில கருமங் களை மேற்கொள்ள வேண்டியது எம் அனைவரதும் பொறுப்பும் கடமையுமாகும்.

வளர்ந்தோர் மறைக்கல்வியில் துண்டுப்பிரசுரம் எனும்போது அப்பாடத்தின் மையப்பொருளாக அமைய வேண்டியது யாதெனில் நாற்பது நிமிட கற்பித்தல் பாடத்தை, நான்கு மணித்தியாலங்கள் ஆயத்தம் செய்து, நான்கைந்து வார்த்தைகளில் கற்போரின் மனதில் பதியவைப்பதுதான் போதனாசிரியரின் துல்லியமான செயற்பாடாகும். பரிசுத்த வேதாகமத்திலுள்ள 72 புத்தகங்களையும் எடுத்து தொகுத்து ஒரு சொல்லில் சொல்ல வேண்டும் எனில் “மீட்பு” என்ற சொற்பதத்தினுள் அடக்கலாம். இதனால்தான் வேதாகமம் மீட்பின் வரலாறு, இறையரசின் வரலாறு, இரட்சணிய வரலாறு எனப் பலவிதங்களில் அழைக்கப்படுகின்றது. மீட்பராகிய இயேசுவின் வருகைக்கு முற்பட்டவைகள், எப்படியாக மீட்பரின் வருகைக்கு ஆயத்தம் செய்தன என்பதைப் பழைய ஏற்பாடும், புதிய ஏற்பாட்டில் மீட்பரின் வருகையும் அவரது வாழ்வு போதனை, அவரால் கிடைத்த மீட்பு, அம்மீட்பு எவ்வாறு திருச்சபையில் பரவியது என்பவையும் எடுத்துக் கூறப்டுகின்றன.

இயேசு தனது பகிரங்கப் பணியின் தொடக்கத்திலே மக்களுக்கு தான் கூறவிருந்ததை புதுமைகள், உவமைகள், சம்பவங்கள் மூலமாக சுருக்கமாகவும் அதேவேளை பொருள் செறிந்த வகையிலும் விளக்கி மக்கள் மனதில் ஆழமாக நிலைநிற்கச்செய்தார். இது இயேசு அன்றைய காலத்தில் உபயோகித்த ஒருவகை துண்டுப்பிரசுரமாகும். திருமுழுக்கு யோவான் யேசுவின் வருகையை முன்னறிவிக்கும், விளம்பரப்படுத்தும் துண்டுப்பிரசுரமாகி ஆண்டவரின் வருகையை ஆயத்தப்படுத்தினார். மக்களிடையே ஆர்வத்தை தூண்டினார். இது இவ்வாறு இருக்கையில் வேதாகம ஆசிரியர்கள் தங்கள் நூல்களில் தாங்கள் கற்றுக்கொடுக்க வந்த மீட்பினை, மறை உண்மைகளை பலவிதமான போதனை முறைகள் மூலம் முன் வைக்கின்றார்கள். அவர்கள் கற்றுக்கொடுக்க வந்த மறை உண்மைகள் தான் வளர்ந்தோருக்கான மறைக்கல்வியில் துண்டுப்பிரசுரமாக அமைய வேண்டியவையாகும். அவ்வாறு அமையும் தறுவாயில் அவை அவர்கள் மனதில் பளிச்சென்று பதியக்கூடியவை.

புதிய ஏற்பாட்டில் நான்கு நற்செய்தியாளர்களும் யேசு மானிடருக்கு கொண்டு வ்த மீட்பு விடுதலையை தங்கள் நற்செய்தியில் நோக்கமாக கொண்டு மக்களிடையே பரவ விட்டிருக்கின்றார்கள். இதில் மாற்கு நற்செய்தியாளரின் நோக்கமானது துன்புற்று, துயர்வுற்று

வேதனைக்குள்ளாகியிருக்கின்ற பிறவினச் சமூகத்திற்கு (உரோமைக் கிறிஸ்தவருக்கு) இயேசுவை யாரென்று அறிமுகம் செய்வது தான் அவரின் நோக்கம் கி.பி 62ல் நீரோ மன்னன் உரோமய அரசகட்டில் ஏறினான். கிறிஸ்தவர்களை வதைக்கத் தொடங்கினான். தொடர்ந்து வந்த தோமீசியன் அரசனும் இதே பாணியில் பணியை தொடர்ந்தான். கிறிஸ்தவர்கள் வதைக்கப்படுகிறார்கள், சிங்கங்களுக்கு இரையாக்கப்படுகின்றார்கள், சிலுவையில் கட்டி வைத்து எரிக்கப்படுகிறார்கள். கொதிக்கும் எண்ணைத் தொட்டிக்குள் உயிருடன் தூக்கிப் போடப்படுகிறார்கள். பெண்கள் குதிரையின் கால்களில் கட்டப்பட்டு குதிரைகளை விரட்டி ஓட்டித் துகள்துகளாக கொலை செய்யப்படுகிறார்கள். இந்த வேளையில் உரோமைக் கிறிஸ்தவ சமூகம் இப்படியா வாழ்வது? துன்பத்தின் அர்த்தம் என்ன? கிறிஸ்தவத்தின் தத்துவம் என்ன? என்று வேதனையின் விளிம்பில் நின்றாடிய வேளையில் நற்செய்தியாளர் மாற்கு அவர்களுக்கு ஒரு நற்செய்தியை விடுக்கின்றார். இயேசு யார் என்று இனம் காட்டுவதுதான் அவரின் நோக்கம். அது அவரின் போதனையின் உள்ளீடு. அவர் வெளிப்படுத்தும் துண்டு பிரசாரம்.

“இயேசு கடவுளின் மகன் துன்புறும் ஊழியன்” என்பதை தனது நற்செய்தி பாடத்தில் புகுத்துகின்றார். மாற்கு நற்செய்தியில் பதினாறு அதிகாரங்கள் உள்ளன. அதிலே முதல் எட்டு அதிகாரங்களிலும் இயேசு கடவுளின் மகன் என்பதை தெட்டத் தெளிவாக எடுத்துக்காட்டு கின்றார். அத்துடன் மாற்கு நற்செய்தியில் உள்ள 24 புதுமைகளில் 17 புதுமைகள் முதல் எட்டு அதிகாரங்களுக்குள் புகுத்தியிருக்கின்றார். கடவுளின் மகனாகிய இயேசுக்கிறிஸ்துவின் தொடக்கம் என்றே தனது நற்செதியை தொடக்குகின்றார். பேயின்மேல், நோயின் மேல், சாவின் மேல், இயற்கையின் மேல், வல்லமை பூண்டவர் இயேசு என்பதை முதல் 17 புதுமைகளிலும் அடக்கிவிடுகின்றார். பேய்கள் கூட இயேசுவை கடவுளின் மகன் என்று அறிக்கையிடுகின்றது. நீங்கள் என்னை யாரென்று கூறுகின்றீர்கள் என இயேசு கேட்டபோது பேதுரு மாற் 8:26இல் “நீர் மெசியா, உயிருள்ள இறைவனின் மகன்” என அறிக்கையிடுகின்றார். அத்துடன் கடைசி எட்டு அதிகாரங்களிலும் இயேசு துன்புறும் ஊழியன் என்று தெளிவுபடுத்துகின்றார்.

இயேசு தம் பாடுகளை மும் முறை முன்னறிவிக்கின்றார். (மாற் 8:31, 9:31, 10:33). தலைமைக்குரு கைப்பாஸ் முன்னிலையில் “போற்று தற்குரிய கடவுளின் மகன் மெசியா நீர் தாமோ” என்ற கேள்விக்கு நானே அவர் (மாற் 14:61-62) என்று இயேசு தன்னை யார் என்று வெளிப் படுத்துகின்றார். இயேசு சிலுவையில் உரக்கக்கத்தி உயிர்துறந்தபோது



அவருக்கு எதிரே நின்று கொண்டிருந்த நூற்றுவத்தலைவன் அவர் இவ்வாறு உயிர் துறந்ததைக்கண்டு "இம்மகன்"உண்மையிலே இறைமகன் எனச்சாட்சியம் பகர்ந்தான் (மாற் 15:37-39).

இவ்விதமாக நற்செய்தியாளர் மாற்கு உரோமைக் கிறிஸ்தவ சமூகத்திற்கு நான் சொல்ல வந்த இரத்தினச்சுருக்கத்தை, துண்டு பிரசாரத்தை தனது நற்செய்தி முழுவதும் பரவ விடுவதை நாம் அவதானிக்க கூடியதாக உள்ளது. "வெள்ளிக்கிழமையில் பாடுகள் இல்லை எனில் ஞாயிறுவின் மகிமை இல்லை", "கோதுமைமணி மண்ணில் விழுத்து மடிந்தால்தான் பலன் தரும், அல்லாவிட்டால் அப்படியே இருக்கும்", "தன்னுயிரைக் காத்துக்கொள்ள விரும்புவன் அதை இழந்துவிடுவான்", என்ற எண்ணக் கருத்துக்களை தனது நற்செய்தியில் உலவ விடுகின்றார். திருமுழுக்கின் மூலம் இறவனின் பிள்ளையாக அழக்கப்பட்ட ஒவ்வொருவரும் இன்பத்தை கண்டு இறுமாப்படையாமல், துன்பத்த கண்டு துவண்டுவிடாமல் கிறிஸ்துவின் வழியில் அவருடன் பயணிக்க வேண்டும் என்பதை துண்டுப்பிரசுரமாக வாசகர்களுக்காக சிதற விடுகின்றார்.

இவ்வாறு மாற்கு நற்செய்தியில் காணப்படுவதற்கிணங்க துண்டுப்பிரசாரப் பாவனையா னது பாரிய பொறுப்பை நிறைவேற்றுவதற்காக காணப்படுகின்றது. எவ்வாறெனில் இத்துண்டுப்பிரசுரங்களில் காணப்படும் இரத்தினச் சுருக்கமான கருத்துக்களும், வாக்கியங் களும் புளிப்புமாவு போன்று அவர்கள் மனதில் ஊடுருவி முழுவதுமாக பரவுகின்றது. இப்பிரசாரங்களிலே காணப்படுபவை அவர்கள் கண்களில் பட்டவுடனேயே மனதில் ஆழப்பதிந்து சிந்தனைகளை சீர்தூக்கிப்பார்க்கின்றது. தானாக முளைத்துவரும் விதைபோன்று அவர்களுக்குள் புதிய சிந்தனைகளை, புத்வேகத்தை தூண்டி அவர்களை முழுமையான, நிறைவான மனிதராக்கி இறைவனிடம் நெருக்கத்தை ஏற்படுத்துகின்றது.

இவ்வகையில் துண்டுப்பிரசாரப் பாவனையானது, வளர்ந்தோர் மறைக்கல்வியில் முழுமையான பங்காற்றும் என்பதில் சந்தேகமில்லை. இத்துண்டுப்பிரசாரங்களானது பலவழிகளில் பங்காற்றுவதுடன் பலரை மறை அறிவில் வளர்த்துள்ளது என்பது அனுபவ உண்மையாகும். எனவே தொடர்ந்தும் இப்பிரசுரங்கள் மக்கள் மனதில் ஆழமாக பதியக்கூடிய வகையிலும், அவர்கள் விசுவாசத்தை மென்மேலும் வளர்ப்பதாகவும் அமைவது வரவேற்கத்தக்கது. அத்துடன் இதன்மூலம் வளர்ந்தோரிடையே இன்னும் மறை அறிவையும், இறை விசுவாசத்தையும் மேம்படுத்தும் என்பது எனது உறுதி.

நன்றி

# மறைஆசிரியரும் உருவாக்கற் பயிற்சியும்

*அருட்பணி. நேசராஜா*

முன்னுரை

"நீங்கள் 'ரபி' என அழைக்கப்பட வேண்டாம்! ஏனெனில், உங்களுக்குப் போதகர் ஒருவரே. நீங்கள் யாவரும் சகோதரர் சகோதரிகளே! இம்மண்ணுலகில் உள்ள எவரையும், தந்தை என நீங்கள் அழைக்க வேண்டாம்! ஏனெனில் உங்கள் தந்தை ஒருவரே! அவர் விண்ணகத்தில் இருக்கிறார்! நீங்கள் 'ஆசிரியர்' எனவும் அழைக்கப்பட வேண்டாம்! ஏனெனில், கிறிஸ்து ஒருவரே உங்கள் ஆசிரியர்! உங்களுள் பெரியவர், உங்களுக்குத் தொண்டராக இருக்க வேண்டும்" (மத். 8:11) இவ்வாறு, இயேசு ஒருவரே, உன்னத ஆசிரியராகவும், முதன்மை ஆசிரியராகவும் திகழ்கின்றார். அவரது பணியைத் தொடர்ந்து செல்ல, அவர் தரும் அழுத்தம், மறைஆசிரியர்கள் மக்களுக்கு தொண்டராக விளங்க வேண்டுமென்பதே!

மறைஆசிரியர்களை (திருத்தூதர்களை) இயேசு உருவாக்கியபோது, "சீடர் குருவை விடப் பெரியவர் அல்ல. பணியாளரும், தம் தலைவரைவிடப் பெரியவர் அல்ல. சீடர் தம் குருவைப் போல ஆகட்டும் அதுவே போதும்" (மத்.10:24-25) என்று, தமது பணியைத் தொடர இருப்பவர்களுக்கு, ஆலோசனை தருகின்றார். அவரது உருவாக்கத்தில் பயிற்சிபெற்ற திருத்தூதர்கள் எவ்வித சவால்களையும் ஏற்க முன்வந்தார்கள் என்பதனை நாம் திருத்தூதர் பணிநூலில் காண்கிறோம். "இயேசுவைப்பற்றி ஏதும் பேசவோ, போதிக்கவோ கூடாது என்று கண்டிப்பாகக் கட்டளையிட்டவர்களுக்கு, திருத்தூதர்கள், "உங்களுக்குச் செவி சாய்ப்பதா? கடவுளுக்குச் செவி சாய்ப்பதா? இதில், கடவுள் பார்வையில் எது முறையானது என நீங்களே தீர்மானித்துக் கொள்ளுங்கள். என்ன ஆனாலும், நாங்கள் கண்டதையும், கேட்டதையும், எடுத்துரைக்காமலிருக்க எங்களால் முடியாது என்றனர்" (தி.ப 4:18-20)

இவ்வாறு தாம் பெற்ற இறையனுபவத்தை, துணிச்சலுடன், எவ்வேளையிலும், எந்த இடத்திலும் அறிக்கையிட முன் வருபர்களே, மறைஆசிரியர்களுக்கு எடுத்துக்காட்டாக விளங்குபவர்கள் தொடக்கத் திருச்சபையில், திருச்சபையைக் கட்டி வளர்த்தவர்கள், பொதுநிலைப் பணியாளர்களே என்பதில் மாறுபாடானகருத்துக்கு இடமேதும் இல்லை! அவர்களை வளர்த்தெடுத்தவர்கள், திருத்தூதர்களும், பவுலடியார் போன்ற மறைபரப்பாளர்களுமே!

தூய பேதுருவால் உருவாக்கப்பட்ட திருச்சபை

தூய பேதுருவால் உருவாக்கப்பட்ட திருச்சபை

வளர்ச்சியடைந்து வந்த தொடக்கத் திருச்சபை, தளர்ச்சியடைவதற்கு, சமூகத்தில் நிலவிய, ஊழல், இலஞ்சம், சமூக வேறுபாடுகள், ஓர வஞ்சகம் தடைகளாக அமைந்ததைக் கண்ணுற்ற ஒருசிலர், இந்தச் சமூக அநீதிகளைக் களைந்தெறிய பேதுருவிடம் முறையிட்டபோது, அவர் தமக்கு, இயேசுவால் தரப்பட்ட பணி, "நாங்களோ, இறைவேண்டலிலும், இறைவார்த்தைப் பணியிலும் உறுதியாய் நிலைத்திருப்போம். எனவே அன்பர்களே, உங்களிடமிருந்து நற்சான்று பெற்றவர்களும், தூயஆவி அருளும் வல்லமையும், ஞானமும் நிறைந்தவர்களுமான எழுவரைக் கவனமாகத் தெரிந்தெடுங்கள். அவர்களை நாம் இந்தப் பணியில் நியமிப்போம்" (தி.ப.6-7அதி) அடுத்து, அவரது மறை பரப்பு பணியைத் தொடர்ந்தாற்றியவர், பொதுநிலைப் பணியாளர் பிலிப்பு (தி.ப. 8:26-40) இவ்வாறு தூயபேதுருவால் உருவாக்கப்பட்ட திருச்சபை, அவரால் நியமனம் பெற்ற, பொதுநிலைப் பணியாளர்களினால் வளர்ச்சி பெற்று வந்ததை வரலாற்றில் காண்கிறோம்.

## தூய பவுலடியாரால் நிறுவப்பட்ட திருச்சபையும், அதில் பங்கேற்ற பொதுநிலையினரும்

தூய பவுலடியார், இயேசுவினால் நேரடியாகத் தேர்வுசெய்யப்பட்ட ஒரு திருத்தூதராக விளங்கினாலும், அவரது திருத்தூதுப்பணி, மிக நீண்டதூரம் பரவலாகிச் சென்றதால், ஆங்காங்கே தாம் உருவாக்கிய சபைகளுக்குக் கண்காணிப்பாளராக, மறை ஆசிரியர்களாக பலரை நியமித்து, தமது மறைபரப்புப் பணியைத் தொடர்ந்தாற்ற, அனேகரை நியமித்து, அவர்களுக்குத் தொடர் பயிற்சிகளைக் கொடுத்து, நற்செய்திப் பணியாற்ற அனுப்பி வைத்ததை திருநூல் எடுத்துக் கூறுகிறது. "கடவுளின் திட்டம் எதையும் நான் உங்களுக்கு அறிவிக்காமல் விட்டுவிடவில்லை. தமது சொந்த இரத்தத்தால் தமதாக்கிக்கொண்ட கடவுளின் திருச்சபையை மேய்ப்பதற்குத் தூயஆவியால் உங்களைக் கண்காணிப்பாளராக ஏற்படுத்தியுள்ளதால், உங்களையும், மந்தை முழுவதையும் கவனமுடன் காத்துக் கொள்ளுங்கள், உங்களை விட்டு நான் சென்ற பின்பு, கொடிய ஓநாய்கள் உங்களுக்குள் நுழையும் என்பது எனக்குத் தெரியும். அவை மந்தையைத் தப்பவிடாதவாறு தாக்கும். உங்களிடமிருந்து சிலர் தோன்றி, சீடர்களையும் தம்மிடம் திசைதிருப்புமளவுக்கு உண்மையைத் திரித்துக் கூறுவர். எனவே விழிப்பாயிருங்கள்" (தி.ப. 20:27-30) என்று, தம்மிடம் பயிற்சி பெற்றவர்களை வலியுறுத்துகிறார்.

### தூய பவுலடியாரால் நியமிக்கப்பட்ட மறைஆசிரியர்கள்

தூய பவுலடியார், மறைத்தூதுப் பணியில் ஈடுபட்டபோது, தமது பயணத் தோழர்களாக சில

பொதுநிலையினரைத் தேர்ந்தெடுத்து அவர்களைத் தம்மோடு இருத்திவைத்து, அவர்களது உருவாக்கத்துக்குப் பெரிதும் துணைநின்றதை திருநூலில் காண்கிறோம். அவரது உருவாக்கத்தில் நன்கு பயிற்சி பெற்றவர்களே, திமெத்தேயு, தீத்து போன்ற மறைபரப்பாளர்கள் ஆவர். நேரடியாகவும், கடிதங்கள் (திருமுகங்கள்) வழியாகவும் அவர்களை நெறிப்படுத்தினார். குறிப்பாக, தீமெத்தேயுவை விளித்து, "என் பிள்ளையாகிய திமெத்தேயுவே உன்னைப்பற்றி முன்னர் சொல்லப்பட்ட இறைவாக்குகளுக்கு ஏற்ப, நான் உனக்கு இடும் கட்டளை இதுவே. அந்த இறைவாக்குகளைத் துணையாகக் கொண்டு, நம்பிக்கையுடனும், நல்மனச்சான்றுடனும், நன்கு போரிடு, சிலர் இம்மனச்சான்றை உதறித் தள்ளிவிட்டதால், விசுவாசம் என்னும் கப்பல் உடைந்து போகச் செய்தனர்" (1திமொ, 18-19)

இவ்வாறு, அவர் தனது மறைபோதகரின் விசுவாசத்துக்கு அடித்தளமிடுகிறார். மறைஆசிரியர்களின் உருவாக்கப் பயிற்சிகளுக்கு, படிப்படியாகக் கட்டியெழுப்பியவர் திருத்தூதர் பவுலன்றி வேறெவருமிலர் என்பதை உறுதிபடக் கூறலாம். அவரது பயணத் தோழர்களாக விளங்கிய பலரிலும், மக்கள் மத்தியில் நன்மதிப்புப் பெற்ற திமெத்தேயு, தீத்து என்பவர்களைத் தன்னோடு இருத்திவைத்து, பயிற்சிகள் கொடுத்ததோடு, தனது திருமுகங்கள் வழியாகவும் அவர்களை உருவாக்குகிறார். (1,2 திமெத்தேயு, தீத்து திருமுகங்கள்)

## திருச்சபைப் பணியில் பொதுநிலையினருக்குரிய பங்களிப்பு

இன்று பொதுநிலையினர், தமது பொறுப்புக்களை, மென்மேலும் உணரும்படி, தூயஆவியார் செய்து வருகிறார். கிறிஸ்துவுக்கும், திருச்சபைக்கும் பணிபுரிய எங்கும் அவர்களைத் தூண்டி வருன்றார். அவரது இந்தத் தெளிவான செயலே, பலவகைப்பட்ட, உடனடியாக நிறைவு செய்யப்பட வேண்டிய பணியின் அறிகுறியாக உள்ளது. "உலகின் நடுவிலே, உலக அலுவலகம் இடையே, வாழ்வது பொதுநிலையினருக்கே உரித்தான ஒன்று. ஆகவே கிறிஸ்துவின் உணர்வால் தூண்டப் பெற்றவர்களால், புளிப்பு மாவைப்போல, உலகிலே இருந்து, தமது திருத்தூதுப்பணியை ஆற்ற, இவர்கள் கடவுளிடமிருந்து அழைப்புப் பெறுகின்றனர்" (பொ.நி.தி.எண்-2)

இறைத்தந்தையால் அனுப்பப்பெற்ற, கிறிஸ்துவே திருச்சபையின் திருத்தூதுப்பணி அனைத்துக்கும் மூலமும் ஊற்றுமாய் உள்ளார். எனவே, "ஒருவர் என்னுடனும், நான் அவருடனும் இணைந்திருந்தால், அவர் மிகுந்த கனிதருவார். என்னைவிட்டுப் பிரிந்து உங்களால் எதுவும் செய்ய முடியாது" (யோவா. 15:5) என ஆண்டவர் கூறியுள்ளதற்கு ஏற்ப, பொது நிலையினர் கிறிஸ்துவோடு கொண்டிருக்கும் உயிருள்ள ஒன்றிப்பைப் பொறுத்தே இவர்களது திருத்தூதுப்பணியின் வளமை அமையும்! திருச்சபையில் கிறிஸ்துவோடு கொள்ளும் இந்த நெருக்கமான ஒன்றிப்பு வாழ்வானது, கிறிஸ்தவர்கள் அனவருக்கும் பொதுவாயுள்ள அருள் உதவிகளாலும் திருவழிபாட்டில் செயல்முறைப் பங்கேற்பாலும் ஊட்டம் பெறுகிறது" (பொது.தி-எண்-04)

## மறைஆசிரியர் பணிக்கு, பயிற்சி தேவை

முழுமையான பலவகைப் பயிற்சி இருந்தால்தான் திருத்தூதுப்பணி முழுப்பலனையும் தரக்கூடும். பொதுநிலையினர் தொடர்ந்து பெறவேண்டிய அருள்நெறி, அறிவு வளர்ச்சி மட்டுமன்றி, செயல்கள் கடமைகள் ஆகியவற்றிற்கேற்ப மாறுபடும் சூழ்நிலைகளுக்கு ஏற்றவாறு, பணிகளைத் தழுவி அமைக்க வேண்டியதன் தேவையும், இந்த முழுப் பயிற்சியைக் கோருகிறது. கிறிஸ்தவர்கள் அனைவருக்கும் பொதுவாக இருக்கவேண்டிய பயிற்சியோடு, ஆள்கள், சூழ்நிலைகள் ஆகியவற்றின் வேறுபாடுகளின் காரணமாக, பல்வகைத் திருத்தூது முயற்சிகளுக்கெனத் தனிப்பட்ட சிறப்புப் பயிற்சியும் தேவைப்படுகிறது.

திருத்தூதுப் பணிக்கான பயிற்சிக்கு முன்பு, ஒவ்வொருவரும் தம் திறமைகளுக்கு, நிலைமைக்கும் ஏற்ப முழுமையான மனிதப்பயிற்சி பெற்றிருக்க வேண்டும். ஏனெனில் பொதுநிலையினர் இன்றைய உலகத்தை நன்கு அறிந்தவராய், தம் சொந்த சமுதாயத்திலும், பண்பாட்டிலும், ஊறிய உறுப்பினராய் இருக்க வேண்டும். மக்களிடையே நல்லுறவுகளை வளர்த்துக் கொள்ள வேண்டும் என்றால் உண்மையான மனித மதிப்புக்கள் பேணப்பட வேண்டும். சிறப்பாக, உடன் பிறந்தோராய் பிறருடன் கூடி வாழ்ந்து, ஒத்துழைத்து, உரையாடல் நடத்தும் கலையைப் போற்றி வளர்க்க வேண்டும். (பொது.தி.எண்-29)

## மறைஆசிரியர் பயிற்சிக்கான உருவாக்க உதவிகள்

மறை ஆசிரியப்பணியில் ஈடுபடும் அங்கத்தவர்களுக்கு கருத்தரங்குகள், மாநாடுகள், ஞானஒடுக்கங்கள், தியானங்கள், குறிப்பிட்ட காலத்தில் கூட்டங்கள், பேருரைகள், நூல்கள், விளக்க உரைகள் ஆகிய உதவிகளை, கூடுமானவரை நடைமுறைப்படுத்தல் அவசியம், திரு விவிலியத்திலும், மறைக்கோட்பாட்டிலும் இவர்கள் ஆழ்ந்த அறிவு பெறவும், அருள் வாழ்விலே ஊட்டம் பெறவும், அத்தோடு உலக நிலைமைகளைப் பகுத்துணர்ந்து கொள்ளவும், தக்க பணிகளைக் கண்டுபிடித்துக் கையாளவும் இத்தகைய உதவிகள் இவர்களுக்கு வழிவகுக்கும் மறைக்கல்வி ஆற்றப்படும் பகுதிகளிலுள்ள பல்வேறு பணிவகைகளை! மேற்கூறிய பயிற்சிச் சாதனங்கள் கண்முன் கொள்ள வேண்டும்.

மேலும், இறையியலை மட்டுமல்ல, மனித இனவியல், உளவியல், சமூகவியல், ஆய்வுமுறையியல் ஆகியவற்றைப் பற்றியும் அறிந்து கொள்ள உதவும் பல ஆவண நிலையங்களும் நிறுவப்படல் வேண்டும். இவற்றால் மறைக்கல்வி பணிகள் அனைத்திலும், ஆண், பெண், இளைஞர், வயதுவந்தோர் ஆகிய எல்லாவயதுப்பொதுநிலையினரின் இயல்பான திறமைகளும் சிறந்த முறையில் வளர்க்கப்படும்.

## எமது மறைமாவட்டத்தில் மறைஆசிரியர்களின் உருவாக்கம்

2ம் வத்திக்கான் சங்கம் "பொதுநிலையினரின் திருத்தூதுப்பணி பற்றிய கொள்கைத்திரட்டு, 18.11.1965ம் ஆண்டு வெளியிட்ட காலத்தில், மறைந்த ஆயர், மேதகு ஜெறோம் எமிலியானுஸ் பிள்ளை ஆண்டகை, தமிழ்நாடு, திண்டிவனம், பூவிருந்தமல்லி ஆகிய இடங்களில், இதற்கென உருவாக்கப்பட்ட "பயிற்சி நிலையங்களுக்கு" யாழ் மறைமாவட்டத்திலிருந்து, தகுதிகாண் பயிற்சியாளர்களைப் பொறுக்கி எடுத்து, "மூன்று ஆண்டுகள் பயிற்சிக்கென "ஆண்டுதோறும் அனுப்பிக்கொண்டே வந்தார். பயிற்சி முடித்து வெளியேறி வந்தவர்கள், பங்குத்தந்தையர்களுக்குப் பக்கபலமாக, பங்குகளில் பணியாற்றி வந்தனர். அவர்களுக்கென்று ஒரு "தனி இடம்" ஆயர் அவர்களால் நியமிக்கப்பட்ட "மறைக் கல்வி இயக்குனர்களால்" கொடுக்கப்பட்டு வந்தது.

நிரந்தர மறைஆசிரியர்களாக "இவர்கள் பங்குகளில்", பல்வேறு வடிவங்களில் "மைக்கல்வியை அளித்து வந்தனர். இவ்வாறு தமிழகத்தில் மறைக்கல்விப் பயிற்சியை முடித்து வெளியேறியவர்களின் எண்ணிக்கை பதினெட்டு (18) ஆக உயர்வடைந்து இருந்தது. ஆயர் அவர்களின் மறைவுக்குப் பின் (1971) தமிழ் நாட்டுக்குப் பயிற்சி பெற அனுப்பி வைக்கப்படுவது நிறுத்தப்பட்டு, "நிரந்தர மறைஆசிரியர்களின் "உதவியோடு யாழ் மறைமாவட்டத்தில், "மறைக்கல்வி நடுநிலையம்" உருவாக்கப்பட்டு, மறைக்கல்வி இயக்குனரின் தலைமையில், ஒவ்வொரு வருடந்தோறும் பங்குகளிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட ஆர்வமுள்ள அர்ப்பணிப்புள்ள ஒருசிலரைத் தேர்ந்தெடுத்து, மூன்று மாதம் "தங்கியிருந்து" பயிற்சி பெற ஊக்குவிக்கப்பட்டது, இதில் பயிற்சிபெற்ற அனேகர், இன்று குருக்களாகவும், துறவிகளாகவும் திருச்சபையில் பணியாற்றுவது குறிப்பிடத்தக்கது.

## எமது மறைமாவட்ட மறைஆசிரியர்களின் இன்றைய நிலை

ஆயிரக்கணக்கான மறைஆசிரியர்கள் எமது மறைக்கல்வி நடுநிலையத்தில் பயிற்சிபெற்று வெளியேறினாலும், அவர்களதுஇன்றையநிலை பரிதாபத்துக்கு உரியதொன்றாகவே விளங்குகிறது. காரணம்; அவர்கள் குடும்பப் பொறுப்புக்களை ஏற்றிருப்பதாலும், வாழ்க்கைச் சுமைகளைத் தாங்கிக்கொள்ள முடியாதிருப்பதாலும், போதிய வருமானம் இல்லாதிருப்பதாலும், கடந்தகாலப் போர் அனர்த்தங்களினால், உறவுகளைப் பறிகொடுத்து அங்கலாய்ப்பதினாலும், இவர்கள் இந்தப்பணியில் நிலைத்திருக்க முடியாதுள்ளனர். அதேவேளை, இவர்களது அக்கறையீனம் காரணமாகவும், இவர்களுக்குத் தொடர் பயிற்சிகள் வழங்கப்படாமையினாலும், சுலபமாக "ஆட்டுத் திருடர்கள்" (சபைகள்) எம்மத்தியில் நுழைந்து, தேர்ந்தெடுக்கப்பட்ட ஆடுகளையே "களவாடிச் செல்லும்" துர்ப்பாக்கிய நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறார்கள். இன்று இவர்கள் ஒருவிதத்தில், "கைவிடப்பட்டவர்களில் ஒருவராகவே" கணிக்கப்படுகிறார்கள். காரணம் இவர்கள் மட்டில் திருச்சபை அக்கறை கொள்ளாதிருப்பதோ இவர்களின் தன்னலமற்ற சேவையைப் பாராட்டவோ, இவர்களின் "அழைத்தலின் மேன்மையை" உணர்த்துவதற்கு, மாதமொரு ஒன்றுகூடலையோ, கருத்தரங்குகளையோ, மகிழ்வூட்டல் நிகழ்வுகளையோ, நடாத்தி,

அவர்களில், "இன்று திருச்சபை எதிர்நோக்கும் சவால்கள் "பற்றி வகுப்புக்களை நடாத்தி வருவதோடு, "சூடுமிதிக்கும் மாட்டின் வாயைக் கட்டாதே" என்ற இறைவார்த்தையின் பொருள் உணர்ந்து, இவர்களுக்குச் சிறியதொரு ஊதியத்தையாவது வழங்கி வந்தால் இவர்கள் பணியில் நிலைத்திருப்பார்கள்.

எம்மிடையே ஊடுருவி வரும் "ஆட்டுத் திருடர்கள்" தமது கொள்கைகளைப் பரப்புவதற்கு, வெளியரங்கமாக இல்லாவிடினும், "இரகசியமாக" ஏராளமான உதவிகளைச் செய்து, அவர்களை இந்தப்பணியில் ஈடுபடுத்த முன்வருகிறார்கள். இவர்களைப் பார்த்த எமது பணியாளர்களும், "இப்படிப்பட்ட சபைகளில்"ஈடுபட்டு முன்னேறத் துடிக்கிறார்கள்.

இன்று நாம் செய்ய வேண்டியது

"மறைஆசிரியர்கள்" என்பவர்கள் இயேசுவின் இறைவார்த்தைப் பணிக்கென அழைக்கப்பட்டவர்கள். அவர்களுக்கென வழங்கப்பட்ட பயிற்சி ஒரு குறிப்பிட்ட காலத்தை உள்ளடக்கியது. அதன்பின் அவர்கள் "கவனிக்கப் படாதவர்களாகவே இருக்கிறார்கள். இவர்களுக்கென தொடர் யிற்சிகளை வருடத்துக்கு ஒருதடவையாவது ஏற்படுத்தித் தருவதோடு ஒவ்வொரு மறைக் கோட்டத்திலிருந்தும் ஒருவரைத் தேர்வுசெய்து; தமிழ் நாட்டிலுள்ள, மறைக் கல்விப் பாசறைக்கும் பயிற்சிக்கும் (2வருடம்) "திரு விவிலிய மேற்படிப்பு" (பூந்தமல்லி) (1வருடம்) அனுப்பி வைத்தால் இன்றைய இளைய தலைமுறையினருக்கு, அவர்கள் வழியாக மறை உண்மைகளையும், திருவிவிலிய விளக்கங்களையும் மக்கள் மத்தியில் பரவலாக்கம் செய்யலாம்.

## நிறைவாக

மறைஆசிரியர் என்பவர், திருச்சபையின் மறைபரப்புப்பணிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டவர். அவரை நன்முறையில் உருவாக்குவது திருச்சபையின் தார்மீகக் கடமை. அவரிடமிருக்கும் ஆற்றல்களைக் கண்டுபிடித்து, அதைத் திருச்சபையின் வளர்ச்சிக்காகப் பயன்படுத்துவது, சம்மந்தப்பட்ட ஒவ்வொருவரின் கடமையாகும். மாறுபடும் உலகில் காணப்படும் வளர்ச்சிக்கேற்ப, அவருக்குத் தொடர் பயிற்சிகளை அளித்து, அவரை உருவாக்குவது இன்றியமையாதது. அவரது வாழ்க்கைகளைப் பிரச்சனைகளையும் கண்ணோக்கி, அவரை மனந்தளர விடாது ஊக்குவிக்க வேண்டும்.

"சபைகளை நன்முறையில் நடத்தும் மூப்பர்கள், சிறப்பாக, இவைார்த்தையை அறிவிப்பதிலும், கற்பிப்பதிலும் ஈடுபட்டு உழைப்பவர்கள், இருமடங்கு ஊதியத்துக்கு உரியவர்களாகக் கருதப்படல் வேண்டும். ஏனென்றால், 'போர் அடிக்கும் மாட்டின் வாயைக் கட்டாதே என்றும், வேலையாள் தம்கூலிக்கு உரிமை உடையவரே என்றும் மறைநூல் கூறுகிறது

(திமொ. 5:17-18)

# சமூக ஊடகங்கள் வழி மறைக்கல்வி அறிவிப்பு இன்றைய காலத்தின் தேவையாகும்

*அருள்திரு ரூபன் மரியாம்பிள்ளை*

இயக்குநர் பிசப் சவுந்தரம் மீடியா சென்ரர்

ஊடக விரிவுரையாளர் யாழ். பல்கலைக்கழகம்




யாழ், மன்னார், திருமலை - மட்டுநகர் மறைமாவட்டங்கள் இணைந்து 2012ஆம் ஆண்டை மறைக்கல்வி ஆண்டாக பிரகடனப்படுத்தியுள்ளன. இந்நிலையில் இன்றை சமுதாயத்தில் குறிப்பாக மாணவர்கள் மத்தியில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்திவரும் சமூக ஊடகங்களை எவ்வாறு மறைக்கல்வி அறிவிப்பிற்கு பயன்படுத்தலாம் என்பது பற்றிய சிந்தனைகளை இறையியல் கோலம் சஞ்சிகையில் பகிர்ந்துகொள்வது பொருத்தமானது.

மறைக்கல்வி கத்தோலிக்க திருச்சபையின் வாழ்வையும் இருப்பையும் உறுதிப்படுத்தி வளப்படுத்தும் அருள் ஊற்று எனலாம்.

காலத்திற்கும் நேரத்திற்கும் மக்களின் தேவைக்கும் ஏற்றவிதமாக மறைக்கல்வி அறிவிப்பு மாற்றம் பெற்று இறைமக்களின் விசுவாச வாழ்வையும் இறை அனுபவத்தையும் உறுதிப்படுத்திக்கொண்டும் வழப்படுத்திக்கொண்டும் இருக்கவேண்டும்.

எல்லோருக்கும் மறைக்கல்வி எனும் கருப்பொருளில் தமிழ் மறைமாவட்டங்கள் இணைந்து மறைக்கல்வி அறிவிப்பு பற்றி சிந்திக்கும் வேளையில் மறைக்கல்வி அறிவு எப்படி ஊடகங்கள் வழி ஊட்டப்படலாம் என்பதை இக்கட்டுரையில் நோக்குவோம்.

இணையத்தினதும் வலையமைப்பினதும் வருகை நினைக்கமுடியாத பல விடயங்களை நிஜமாக்கியுள்ளது.

சமூக ஊடகங்களினதும் நவீன ஊடகங்களினதும் வருகை விரல் நுனியில் என்று பேசப்படும் பதத்தை உண்மையில் நிஜமாக்கியுள்ளது.

ஆங்கில மொழி மூலமான மறைக்கல்வி அறிவிப்பு இணையத்தில் பாரிய வளர்ச்சிகண்டுள்ள நிலையில் தமிழ் மொழி மூலமான மறைக்கல்வி அறிவிப்பு குறிப்பாக இலங்கை தமிழ் மறை மாவட்டங்களிடையே வளர்ச்சிபெறவில்லை என்றே கூறவேண்டும்.

சம்பந்தப்பட்டவர்கள் இதில் கூடிய கவனம் செலுத்தவும் தேவையான பயிற்சிகளைப் பெற்று போதுமான வசதிகளை செய்து இந்த பாரிய சவாலை ஏற்று விரைவாக செயல்படுத்த வேண்டும்.

சமூக ஊடகங்களை பாவிப்பதும் பயன்படுத்துவதும் இலவசமானது என்கின்ற வேளை அது இலகுவானதும் கூட. இவ்வசதியையும் பெரும் வாய்ப்பையும் ஏன் நாம் இன்னும் பயன்படுத்தவில்லை என்பது ஒரு பெரிய கேள்வியாகும்.

ஒரு நூற்றாண்டு காலமாக மெதுவான வளர்ச்சி கண்டுவந்த அச்சு ஊடகமும் ஓரளவு வளர்ச்சி கண்டுவந்த மின் ஊடகமும் அண்மைக்கால புதுவரவான சமூக ஊடகங்களின் வரவால் பெரும் சவாலை எதிர்நோக்கியுள்ளது.

பாரம்பரிய ஊடகமான அச்சு ஊடகம் பத்திரிகையை அறிமுகம் செய்து நீண்ட காலம் சென்ற பின்னர் கணணியின் வரவு அச்சு ஊடகத்தில் மாற்றத்தை ஏற்படுத்தியது. கணினியின் வரவால் கையினால் எழுத்துக்கோக்கும் முறை மாற்றப்பட்டது. பழைய அச்சு இயந்திரங்களுக்குப் பதிலாக எதிர்ப்பதிவு அச்சு முறை (Off-set) அறிமுகப்படுத்தப்பட்டது.

ஆசியாவில் முதல் நாடாக இலங்கை வானொலியை அறிமுகப்படுத்தியபோது - அது ஒரு கண்ணற்ற ஊடகம் என்றாலும் எங்கும் செல்லக்கூடிய ஓர் ஊடகம் என்கின்ற வகையில் - பெரு வரவேற்பைப் பெற்றது.

ஆசிய நாடுகளில் இறுதி நாடாக இலங்கை தொலைக்காட்சியைப் பெற்றுக்கொண்டபோது அது கறுப்பு வெள்ளை யுகத்தைத் தாண்டி நேரடியாக வர்ண தொலைக்காட்சியுகத்தினுள் நுழைந்தது.

வானொலியும் தொலைக்காட்சியும் அறிமுகப்படுத்தப்பட்டபோது பத்திரிகை இல்லாமல் போய்விடுமோ என்றே கருதப்பட்டது.

ஒவ்வொரு புதிய ஊடகத்தின் வரவும் பழைய ஊடகத்தை இல்லாமல் செய்துவிடுமோ என்ற ஒரு பய உணர்வை தோற்றுவித்தாலும் அது நடைபெறவில்லை.

கடந்த ஒரு தசாப்தகாலத்தினுள் ஊடகமானது சமூக ஊடகங்களின் வழி வேகத்தையும் பாரிய மாற்றத்தையும் கண்டுள்ளது. குறிப்பாக புளொக் (Blog) பேஸ் புக் (Facebook) வலைப்பின்னல் (Website) ருவிற்றர் (twitter) யூரியூப் (youTube) பிளிக்கர் (flicker) போன்ற சமூக ஊடகங்களின் வருகை பாரிய மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.

இந்த வேக ஊடகங்களின் வரவுகூட முன்னிருந்தவற்றை அழித்துவிடவில்லை மாறாக அணைத்துக்கொண்டே வந்துள்ளது. இன்று நேரலைப் பத்திரிகையியலில் (Online Journalism) பாரம்பரிய பத்திரிகைகளை மின்பத்திரிகையாக (e - paper) படிக்க முடியும். அதேவேளை அதன் புதிய வடிவமான நேரலைப்பத்திரிகையையும் (Online paper) படிக்க முடியும். அதேவேளை பாரம்பரிய தொலைக்காட்சியையும் வானொலியையும் நேரலையில் கேட்க முடியும்.

சுருக்கமாகச் சொல்வதானால் மெதுவான வளர்ச்சிகண்ட பாரம்பரிய ஊடகங்கள் சமூக ஊடகங்களின் வரவால் வேகமாக பாரிய வளர்ச்சி கண்டுள்ளது. அத்தோடு கூட பழைய ஊடகங்கள் அனைத்தையும் தன்னோடு இணைத்து ஒரு பல்லூடகத் தன்மையை (Convergence Journalism) உருவாக்கியுள்ளது.

இதனாலேயே இணையத்தளங்களில் செய்திகளைப் படிக்க முடிகிறது படங்களைப் பார்க்க முடிகிறது. நேர்காணல்களையும் செய்திகளையும் ஒலிப்பதிவு மூலமாக (Podcast) கேட்க முடிகிறது. ஒளிப்பதிவு (Web cast) மூலமாக செய்திகளையும் காணொளிகளையும் பார்க்க முடிகிறது.


உண்மையில் 90களின் இறுதியில் HTML Coding எனப்படுகின்ற இணைய மொழியை கற்றுக்கொள்ளாமலே யாரும் புளொக்குகளையும் இணையத்தளங்களையும் சொந்தமாக வைத்துக்கொள்ள முடியும். அவற்றை சிறந்த விதமாக இயக்க முடியும் என்பதோடு அவை இலவசமாக கிடைக்கும் என்ற நிலையும் தோன்றியது. இதுவே பாரம்பரிய ஊடகங்களை சவாலுக்குட்படுத்தி சமூக ஊடகங்களை அனைவருக்கும் திறந்துவிட்டு அனைவரும் அதில் தம் கைவரிசையைக் காட்டக்கூடிய ஒரு புதிய யுகத்தை அறிமுகப்படுத்தியது எனலாம்.

உலகளாவிய ரீதியில் நோக்குகின்றபோது இந்த மாற்றங்களை கத்தோலிக்க திருச்சபையும் தன்னுடையதாக்கி இந்த ஊடகங்களின் வேக வளர்ச்சிக்கு தன்னை ஈடுபடுத்திக்கொண்டு வந்திருக்கின்றது என்றே கூறவேண்டும்.

திருத்தந்தை 16ஆம் பெனடிக்ற் பாப்பரசரின் செயல்பாடுகளை நோக்குகின்றபோது அவர் ஊடகத்தினை இன்னும் குறிப்பாக இந்த சமூக ஊடகங்களை தமது சமயப் பணிகளில் பயன்படுத்துவதை காணக்கூடியதாக இருக்கின்றது.

திருத்தந்தை 16ஆம் பெனடிக்ற் பாப்பரசர் சமூக ஊடகங்களையும் அவற்றின் பாவிப்பையும் பெரிதும் விரும்புகிறார் - ஊடகங்கள் வழியாக ஒரு இணையற்ற

தொடர்பாடலை ஏற்படுத்த முடியும் - அது கத்தோலிக்க உறவையும் தொடர்பையும் செயற்பாடுகளையும் வளர்க்க உதவும் என நம்புகிறார். திருத்தந்தையின் சில செயல்கள் இதனை நமக்குத் தெளிவாக விளக்கி நிற்கின்றன.



திருத்தந்தை 16ஆம் பெனடிக்ற் பாப்பரசர் தமது குருத்துவத்தின் 60ஆவது ஆண்டு நிறைவு தினத்தில் புனித இராயப்பர் சின்னனப்பர் பெருவிழாவில் வத்திக்கானின் உத்தியோகபூர்வ செய்தி நிறுவனமான நியூஸ் வத்திக்கானை ருவிற்றர் எனும் சமூக வலையமைப்பில் உத்தியோகபூர்வமாக தொடக்கிவைத்தார்.

எனது அன்பான நண்பர்களே வத்திக்கான் செய்தி நிறுவனத்தை ஆரம்பித்து வைப்பதில் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன். ஆண்டவர் இயேசு புகழப்படுவாராக எனது செபங்களும் ஆசீரும் உங்கள் மேல் நிறைய வந்து தங்குவதாக என்ற செய்தியை சமூக வலையமைப்பான ருவிற்றரில் ஐபாட் மூலமாக உலகிற்கு வெளியிட்டார்.

டிசம்பர் 7 2011 அன்று திருத்தந்தை 16ஆம் பெனடிக்ற் பாப்பரசர் உலகின் மிகப்பெரிய கிறிஸ்மஸ் மரத்தினை தமது வத்திக்கான் வாசஸ்தலத்தில் இருந்தபடியே நவீன தொழிநுட்ப சாதனமான ஐபாட்டை தொட்டு கிறிஸ்மஸ் மர மின்விளக்குகளை ஒளிர செய்துள்ளார்.

வத்திக்கான் கத்தோலிக்க செய்திகளையும் காணொளிகளையும் யூ ரியூப்பில் ஆங்கிலம் இத்தாலியம் ஆகிய மொழிகளில் வெளியிட்டு வந்த நிலையில் பிரெஞ் மொழியிலும் செய்தி சேவையை ஆரம்பித்து வத்திக்கான் செய்திகளை வெளியிட ஒழுங்குகளை மேற்கொண்டார்.

## சமூக ஊடகங்களை எவ்வாறு மறைக்கல்விக்குப் பயன்படுத்தலாம்?

மறைக்கல்வி அறிவிப்பிற்கு சமூக ஊடகங்களான புளொக், முகநூல், யூரியூப் ,பிளிக்கர், 33ருவிற்றர் போன்றவற்றை பயன்படுத்த முடியும்.

புளொக்குகளை யாரும் இலவசமாக இணையத்தில் ஆரம்பிக்க முடியும் புளொக்குகளை எவ்வாறு இயக்குவது என்பதை மிக இலகுவாக இணையத்திலேயே கற்றறிந்துகொள்ள முடியும்.

இணையத்தளங்கள் கூட இன்று இலவசமாக குறிப்பிட்ட வசதிகளுடன் பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருக்கின்றது. மேலதிக வசதிகளைப் பெற்றுக்கொள்ளவே பணம் செலுத்தவேண்டியுள்ளது. இந்த நவீன தொழில்நுட்பத்தை மறைக்கல்வி அறிவிற்கு சிறப்பாக பயன்படுத்த முடியும்.

இன்று இளைஞர்கள் மத்தியில் நினைத்துப்பார்க்க முடியாத அளவிற்கு பிரபல்யமடைந்துள்ள முகநூல் வழி மறைக்கல்வி அறிவிப்பை மிகவும் சிறந்த விதமாக ஆற்றமுடியும்.

இவ்விடயத்தில் எமது தமிழ் மறைமாவட்டங்கள் எந்தவித முயற்சியும் எடுக்கவில்லை என்றே கூறவேண்டும். இலகுவாக இலவசமாக கிடைக்கின்ற குறிப்பாக இளைய சமுதாயத்தை வெகுவாகக் கவருகின்ற இந்த முகநூல் வழி இளைஞர்களையும் மறைக்கல்வி மாணவர்களையும் கவரமுடியும்.

பங்குகளிலே இருக்கின்ற மறைக்கல்வி மாணவர்களுக்கென ஒவ்வொரு பங்கிலும் ஒரு முகநூலை ஆரம்பித்து அதனை பங்குகளுக்கிடையில் இணைத்துவிட்டு அவர்கள் தமக்கிடையே விடயங்களைப் பகிர்ந்துகொள்ளவும் - செய்திகளைத் தெரிவிக்கவும் - மறைக்கல்வி அறிவினை வளர்க்கின்ற விதமாக எழுத்தாக்கங்கள் படம் வரைதல் போன்ற போட்டிகளை நடத்தவும் மேலும் புகைப்படங்களை பகிர்தல் போன்ற பல செயலற்பாடுகளை ஆற்ற முடியும்.

முகநூல் இளைஞர்கள் மத்தியில் பெரும் செல்வாக்கு செலுத்துகின்ற படியால் அதனை மறைக்கல்வி படிக்கின்ற மாணவர்களுக்கு அறிமுகப்படுத்தி அதன்வழி பாரிய மாற்றத்தை ஏற்படுத்தலாம்.

இலவசமாக உருவாக்கக்கூடிய இணையத்தளங்களைக் கூட பங்குகள்தோறும் உருவாக்கி அங்கு மறைக்கல்வி வகுப்புக்கள் பற்றிய விபரங்கள் - மறைக்கல்வி பரீட்சை முடிவுகள் - மறைக்கல்வி துணுக்குகள் போன்ற பலவற்றை பகிர்ந்துகொள்ள முடியும். மறைக்கல்வி மாணவர் அனைவரின் புகைப்படங்களைக் கூட அங்கு இணைத்துவிடலாம்.

மறைக்கல்வி அறிவை புகட்ட தயாரிக்கப்பட்ட மறை கல்வி அறிவுசார்ந்த நூல்களை இந்த மறைக்கல்வி இணையத்தளத்தில் அல்லது புளொக்கில் இணைத்துவிட்டால் இறைமக்கள் அவற்றை தாமாகவே சென்று பார்க்கவும் படிக்கவும் பயன்பெறவும் முடியும்.

யூரியூப் என்பது காணொளிகளை பார்க்கின்ற ஒரு தளமாகும். இங்கு கூட இலவசமாக இணைப்பினைத் தொடங்கி குறும்படங்களையும் பங்கு மறைக்கல்வி நிகழ்வுகளையும் காணொளிகளாக்கி தரவேற்றம் செய்யலாம்.

விரும்புகின்ற போது யூரியூப்பில் தரவேற்றம் செய்யப்படும் காணொளிகளுக்கான போட்டிகளைக் கூட நடத்த முடியும். இதனால் மறைக்கல்வி மாணவர்களும் வளர்ந்தவர்களும் இணையத்தளத்தினுள் வரவும் இவற்றைப் பார்க்கவும் இதுபோன்ற காணொளிகளைத் தயாரிக்கவும் ஆர்வமூட்டப்படலாம்.


நேரத்தை விரயமாக்கவும் தேவையற்ற விடயங்களில் ஈடுபட்டு குழப்பத்தை ஏற்படுத்தவும் முற்படுகின்றவர்களுக்கு இது ஒரு பொழுதுபோக்காகவும் அதேவேளை அறிவூட்டலாகவும் அமையுமென்பதில் ஐயமில்லை.

பிளிக்கர் என்கின்ற தளமானது தரமான சிறந்த புகைப்படங்களை இலவசமாக தரவேற்றும் ஒரு தளமாகும். மறைக்கல்வி சார்ந்த சிறந்த புகைப்படங்களையும் ஆலயங்களில் நடைபெறும் மறைக்கல்வி நிகழ்வுகள் மற்ற விடயங்களைக் கூட இதில் தரவேற்றம் செய்யலாம்.

சமூக ஊடகங்கள் பாரிய தாக்கத்தை சமுதாயத்திலும் குறிப்பாக இளைஞர் மத்தியிலும் ஏற்படுத்த வல்லன. பழைய பாரம்பரியத்தை விட்டு புதிய பாணியில் வேகமாக அதேவேளை கவரத்தக்க விதமாக நவீன தொழில்நுட்பத்தின் வழி மறைக்கல்வி அறிவிப்பை காலத்திற்கேற்றவாறு மாற்றி அமைத்துக்கொண்டு செல்வது இன்றைய காலத்தின் கட்டாய தேவையாகும்.

இதற்கு போதுமான அளவு அடிப்படை அறிவு புகட்டப்படவேண்டும். குறிப்பாக ஊடகங்களின் செயல்பாடு சமூக ஊடகங்களின் நிலை அவற்றை இயக்குகின்ற விதம் என்பன பற்றிய அறிவு புகட்டப்படவேண்டும். கணினி டொங்கிள் போன்ற உபகரணங்கள் பெறப்பட்டு இணைப்பு வசதிகள் செய்யப்படவேண்டும்.

இவற்றையெல்லாம் செய்து மாணவர்களை உரியவிதமாக நெறிப்படுத்தினால் அவர்களை ஒரு பாரிய வளர்ச்சிப்பாதைக்கு இட்டுச்செல்ல முடியும்.



# Tution வகுப்புகளும் வார இறுதி மறைக்கல்வி வகுப்புகளும்


செல்வி. N.F றஞ்சினி
யா/சென்.ஜேம்ஸ் மகா வித்தியாலயம்
உபஅதிபர்

திருச்சபையின் ஆணி வேராகவும் இதயத் துடிப்பாகவும் உள்ளது திருவிவிலியம் ஆகும். இதிலுள்ள இறை வார்த்தைகள் ஒருவனை விசுவாசத்திலும், கிறிஸ்தவ வாழ்வின் முதிர்ச்சியிலும் வளரச் செய்வது மறைக் கல்வியாக மாறிவிடுகின்றது. எல்லோருக்கும் மறைக்கல்வி வழங்கப்பட வேண்டும் என்பதே இவ் ஆண்டின் மையப் பெருளாக உள்ளதனால், குழந்தைகள், சிறுவர்கள், இளையோர், முதியோர், உரிமை வாழ்விழந்தோர், நோய்களால் பல்வேறு துன்பங்களாலும் வருந்துவோர் அனைவருக்கும் இது உரித்தாகின்றது.

எனவே திருமுழுக்கினூடாக கிறிஸ்தவர்களாக வாழ அழைக்கப்பட்ட நாம் அனைவரும், வாழ்நாள் பூராகவும், மறைக்கல்வியை கற்று சாட்சிய வாழ்வு, வாழ வேண்டியவர்களாக உள்ளோம். ஒரு குழந்தை தாயின் கருவில் உருவாகிய நாள்முதல் தனது பெற்றோரின் குணாதிசயங்களை உள் வாங்குகிறது. எனவேதான் பெற்றோர் தம் சொல்லால் செயலால் தமது குழந்தைகளுக்கு முதன்முதலில் மறைக்கல்வியை ஊட்ட வேண்டிய கட்டுப்பாடு உடையவர்களாக இருக்கின்றார்கள். இதனால்தான் குடும்பம் ஒரு குட்டித் திருச்சபை, ஒரு பல்கலைக் கழகம் என்றெல்லாம் சான்றோர் கூறுவர்.

குடும்பத்தில் மறை அறிவைப் பெற்றுக்கொண்ட குழந்தை ஆலயத்தில் காலடி எடுத்து வைக்கின்றது. ஒவ்வொரு பருவ, நிலைக்கும் ஏற்ப அருட்சாதனங்களைப் பெற்றுக் கொள்வதனூடாகவும், திருவழிபாடுகளில் பங்குகொண்டு இறைவார்த்தைகளுக்கு செவிமடுப்பதனூடாகவும் விசுவாசத்தை ஆழப்படுத்தி கிறிஸ்துவின் அடித்தளத்தில் தனது






வாழ்வைக் கட்டி எழுப்புகின்றது. இத்தகையதொரு அடித்தளம் வாழ்க்கையில் ஏற்படும் சவால்கள், துன்பங்கள் நோய் நொடிகள், ஏற்றத் தாழ்வுகள் அனைத்தின் மத்தியிலும் அசைவுறாது விசுவாச வாழ்வில் உறுதியாக நிலைத்திருக்க வலிமை யைப் பெற்றுக் கொடுக்கின்றது. சீரழிந்து கொண்டிருக்கும் இன் றைய சமுதாயத்தில் ஒழுக்க நெறி யுள்ள கிறிஸ்தவ விழுமியங் களோடு வாழ்கின்ற பண்பினைப் பெற்றுக் கொடுக்கின்றது. நாட்டின் நற்பிரஜைகளாக வாழ வழிவகுக்கின்றது.

உலகில் அதி உன்னத ஆசிரியராக விளங்கும் இயேசுவிடம் மறை அறிவைப் பெற்றுக்கொண்ட பல்லாயிரக் கணக்கான மக்கள், இயேசுவின் படிப்பினைகள், அருள் அடையாளங்கள், அற்புதங்களைக் கண்டு அவர் வழி சென்று தம் இன்னுயிரை மறைக்காக ஈய்ந்துள்ளார்கள். தமது வாழ்வையே முழுமையாக இறைவனுக்கு அர்ப்பணித்து, உலகின் உப்பாக ஒளியாகத் துலங்குகின்றார்கள் (உ+ம்) யோசவ்வாஸ் அடிகளார், அன்னை திரேசா

ஆனால் நவீன ஆடம்பரங்கள் போன்றவற்றில் புகழ் தேட வேண்டும் என்ற நோக்கத்திற்காக, ஒரு சில பெற்றோர் துடியாகத் துடிக்கின்றார்கள். தங்கள் அன்பு நிறைந்த வாழ்க்கையால் பிள்ளைகளைப் பேணி வளர்த்துப் பாதுகாக்க வேண்டியவர்கள் தங்களதும் குழந்தைகளதும் ஆன்மீக வாழ்வை மறந்தவர்களாக சிறுபராயத்திலேயே "ரியுசன்" வகுப்புகளிலே தள்ளி விடுகின்றனர். மனதிலே வஞ்சனை அற்ற பிஞ்சுப் பாலகர்கள்களை மறைக்கல்வி வகுப்பிற்கு செல்லவிடாது தடைபோடுகின்றார்கள். பிள்ளைகள் விரும்பி மறைக்கல்வி வகுப்புகளுக்கு செல்ல எத்தனித்தாலும், திருப்பலி முடிவுற்றவுடன் அவர்களை கையில்பிடித்து 'Tution' வகுப்புகளுக்கு அனுப்புவதற்காக அழைத்துச் சென்றுவிடு கின்றார்கள்.

இத்தகைய சிறார்கள் நாளாந்தம் உலக சிற்றின்பங்களால் மூழ்கடிக்கப்பட்டு அக்கிரமங்கள், அநீதிகள், கொள்ளைகள், கொலைகள், வன்முறைகளில் ஈடுபடுகின்றார்கள். இயேசுவைப்போல் வளர வளர, அறிவிலும் சிறந்து, விளங்க வேண்டிய சிறுவர்கள் இன்று Tution, T.V, கணனி, தொலைபேசி போன்ற ஆடம்பரங்களால், அழிந்துபோகும் சிற்றின்பங்களைத் தேடி ஓடுபவர்களாக உருமாறுகின்றனர். முன்பெல்லாம் பாடசாலைகளில் வாரத்தில் வரும் முதல் ஐந்து நாட்களிலும் முதலாம் பாடம் சமயத்திற்கே முன்னுரிமை வழங்கப்பட்டதனால் அன்று வாழ்ந்த மாணவ சமுதாயம் கல்வியிலும், ஒழுக்கத்திலும் சிறந்து

பண்புள்ள பிரஜைகளாகத் துலங்கினார்கள், ஆனால் இன்று பாடசாலைகளில் கிழமைக்கு இரண்டு பாடங்கள், அதுவும் கடைசிப் பாட வேளையாகவும் நேரசூசியில் இடம்பிடித்து விடுகின்றது. அதுவும் வேற்றுமதப் பாடசாலைகளில் கத்தோலிக்க ஆசிரியர்களுக்கு தட்டுப்பாடும் நிகழ்கின்றது. இதனால் இன்று மாணவர்கள் கட்டுப்பாடின்றி ஒழுக்கமின்றி மனம் போன போக்கில் வாழ்ந்து சீரழிந்து விடுகின்றார்கள். எனவே பெற்றோர், ஆசிரியர், சமூகத்திலுள்ளோர் அனைவரும் விழிப்படைந்தவர்களாய் மாணவர்களின் அறிவியல் சார்ந்த கல்வியோடு அவர்கள் ஆன்மீக வளர்ச்சியிலும் முன்னேற தங்களாலான பங்களிப்பை வழங்க வேண்டும். குழந்தைப் பராயத்திலிருந்து நாம் அவர்களை சரியான பாதையில் நடத்திச் செல்லாவிடின், பிற்காலத்தில் அவர்கள், சீரழிந்து செல்கின்ற இன்றைய சமூகத் தொடர்பு சாதனங்களில் நாம் அடிக்கடி கேட்கின்ற பார்க்கின்ற நிலைமைகளுக்கு நாமும் பொறுப்புக் கூறவேண்டியவர்களாவோம். ஒருவன் எத்தகைய உயர் நிலையில் இருந்தாலும் அவன் மறைக் கல்வியினால் மட்டும் பெறுகின்ற அறிவே, அவனை நல் மனச்சான்றுடன் கிறிஸ்தவ விழுமியங்களில் முழு மனிதனாக வாழவும், சமுதாயத்தில், இந்த நாட்டில், ஏன் எங்கு சென்றாலும் நற்பிரஜையாக சாட்சிய வாழ்வு வாழ வழி வகுக்கின்றது. எனவே மறைக் கல்வியின் மகத்துவத்தை உணர்ந்தவர்களாய் நாம் அனைவரும் ஒன்று சேர்ந்து செயல்படுவோம்.



# இளையோர் மறைக்கல்வியின் அவசியம்

*அருட்பணி. B. பிறாயன்*

முன்னுரை

"இன்றைய இளைஞர்கள் நாளைய தலைவர்கள்" என்கின்ற ஒரு அழகான வரியின் திருத்திய வரியை ஒரு தடவை உங்களோடு பகிர்ந்து கொள்ள விரும்புகின்றேன். அது "இன்றைய இளைஞர்கள் இன்றைய தலைவர்கள்" என்பதாகும். தலைமையை ஏற்கும்போது சவால்களுக்கு முகம் கொடுக்க வேண்டும். ஆகவே இளைஞர்கள் இன்றே சவால்களை ஏற்பதற்கு தம்மைத் தயார்படுத்த வேண்டும். காரணம் அவர்கள் தான் இன்றைய தலைவர்கள். இதற்கு ஆளுமை அவசியம் தேவை. ஆளுமை என்பது வெறுமனே உலகியல் கல்வியாலோ, உலகியல் கோட்பாடுகள், சிந்தனைகளினாலோ வந்து விடும் ஒரு நிலை அல்ல. மாறாக ஆளுமைக்கு ஆன்மீகம் மிகமிக அவசியம். ஆகவே ஆன்மீக ஆளுமையின் விருத்தியை அடையவும், வேண்டியவரை பெருக்கிக் கொள்ளவும் இளைஞர்கள் விருப்பம் கொள்ள வேண்டும்.

இளைஞர்கள் என்றாலே எம் அன்றாட, உலகியல் கண்ணோட்டத்திலே பொதுவாக வேண்டப்படாதவர்களாக, சேவையற்றவர்களாக, வெட்டி மனிதர்களாக, பலரும் நினைத்து இவர்களை ஒதுக்கி, நசுக்கி விடுவதுமுண்டு. குற்றச்சாட்டுகளை மலைபோல் குவித்து, இளைஞர்களை பலரும் சேதப்படுத்துகின்றார்கள். இப்படி பலரும் நினைப்பதற்கு இளைஞர்களே காரணம் என்றும் நாம் அறியாமல் இல்லை.

அதாவது பங்குகளிலே, மறைமாவட்டத்திலே தம்முடைய பொறுப்பை, கடமையை, தேவையை உணராமல் ஏனோ தானோ என்று பல இளைஞர்கள் வாழ்கிறார்கள். ஒரு சிலர் அர்ப்பணிப்போடு பணியாற்றுவார்கள். ஆனால் பணியாற்றும் இளைஞரைப்பற்றி மற்ற இளைஞர்களே பொல்லாதவை பேசுவார்கள்.

ஆனால்!

நெஞ்சுக்கு நேர்மையாகப் பார்க்கும்போது இளைஞர்கள் சக்தி ஒருபோதும் அசைக்க முடியாத சக்தி! இவர்களை சேதப்படுத்த நினைத்தால் நாமே சேதமாகி விடுவோம்!

ஆனாலும் பல இளைஞர்கள் கிறிஸ்தவத்தின் அடிப்படை போதனாமுறை, வழிபாடு, அருளடையாளங்கள், திருச்சபை போன்ற கிறிஸ்தவ யதார்த்தங்களை புரியாமல் இருப்பது வேதனைக்குரிய விடயம். சிறுவயதிலே படித்த மறைக்கல்வி இப்போது ஞாபகம் இல்லை. அதனால் விசுவாச சத்தியங்களை புரிந்து கொள்ள முடியாமல், அதை புரிந்து கொள்ள விரும்பாமல் வாழும் இளைஞர்கள் ஏராளம்.

ஆகவே!

இவர்களை நல்வழிப்படுத்த வேண்டும். அதற்கான திட்டங்களை மேற்கொள்ள வேண்டும். இளைஞர்களுக்கான மறைக்கல்வியை நவீன முறையில் போதிக்க வேண்டும். ஞாயிறு மறைஉரைகளை இன்னும் அர்த்தமுள்ளதாக்க வேண்டும்.

அப்போது!!

இளைஞன் விழித்தெழுவான். செயல்படத் தொடங்குவான். தான் திருச்சபைக்கு, சமூகத்திற்குத் தேவை என்பதை உணருவான். தன்னால் முடிந்தவரை அர்ப்பணிப்போடு பணியாற்றுவான்.

தேவை என்னவென்றால்!

ஒரு தடவை இளைஞனை உசுப்பி விட வேண்டும். அவன் இன்றைய தலைவன் என்பதை அடையாளப்படுத்த வேண்டும். பொறுப்பை ஏற்கும் பக்குவத்தை பரப்ப வேண்டும்.

இறுதியில்!!

தான் வளர்ந்து அடுத்தவனையும் வளரச் செய்யும் ஆன்மீகம் இயல்பாக அவனுள் மலரும் ஆளுமை வளரும், அறிவும் வளரும், அன்பும் பெருகும் உடனே தியாகம் தலைதூக்கும்.

## இன்றைய இளைஞர்கள்

கால நீரோட்டத்தில் சிக்கி வாழும் இளைஞர்கள் இன்று எதிர்கொள்ளும் சவால்கள் ஏராளம். உலகமயமாக்கலின், நவீன தொழில்நுட்பங்களின் அசுர வேகமும், மேலாண்மையும் இயல்பாகவே எம் இளைஞர்களை பாதிக்கின்றன. மேலைத்தேய கலாச்சாரமும், பண்பாடும், நடை உடை பாவனையும், இறைமறுப்புக்கொள்கைகளும் மிகவும் இலகுவாக உலகிலே பரப்பப்படுகின்றபோது இதற்கு வெகு இலேசாகவே இளைஞர்கள் அறியாமலேயே உட்செல்லுகின்றார்கள். சமுதாயச் சீர்கேடுகள் தலைதூக்கும் போது இளைஞர்கள் தம்நிலைகளை உணராமல் சீரழிந்து போகின்றார்கள் என்பதை நினைக்கையில் மிகவும் வேதனையாக உள்ளது.

## சீரழிவுகள் வரிசையிலே

1. நுகர்வு வெறி :

உலக மயமாக்கல் இன்று உலகினை வாட்டி வதைக்கின்றது. நாளுக்கு நாள் வடிவமைக்கப்படும் புதிய நவீன கருவிகள் தேவைக்கு அதிகமாக, மிக வேகமாக உலகை வலம் வந்து கொண்டிருக்கின்றன. கணிப்பொறி என்றாலென்ன, கைத்தொலை பேசி

என்றாலென்ன புதிதாக வந்து வாழ்வை சுலபமாக்குவதை விட வாழ்வை நாசமாக்குவதை புரியலாம். பணம் படைத்தவர்கள் நாளாந்தம் இந்த நுகர்வு வெறிக்கு அடிமையாவதுபோல எதையாவது செய்து மற்றவர்கள் தங்களைப் பார்க்க வேண்டுமென்று நினைக்கும் இன்றைய இளைஞர்களால் இந்த நுகர்வு வெறியிலிருந்து தப்பிக்க முடியாமல் உள்ளது கண்கூடு. இந்த நுகர்வு வெறிக்கு அடிமையாய் இருப்பவர்கள் அதிகம் இளைஞர்களே என்பதை நாம் தெட்டத் தெளிவாகப் புரிந்து கொள்ளலாம்.

2. போதைப் பொருள் பாவனை :

மதுவுக்கும் பிற போதைப் பொருட்களுக்கும் அதிகம் மயங்குபவர்கள் இளைஞர்கள் என்பதை நாம் தெளிவாக அறிந்து கொள்ளலாம். களியாட்டமும், குடிவெறியும், கூடா ஒழுக்கமும் தலைதூக்க கெட்ட நிலையும், சூதாட்டமும் இளைஞர்களைப் பாழாக்குகின்றது. அதிகாரம், புகழ்ச்சி, நாயக, நாயகி வழிபாடுகள், அடிப்படைவாதம், வழுப்புவாதம், சண்டை, சச்சரவு, சினிமா மோகம், போன்ற பல்வேறு விதமான தீமையின் வழிகளை இளைஞர்கள் தம்மேல் சந்தோஷமாக சுமக்கின்றார்கள். இதற்கு அடிமையாகும் இளைஞர்கள் உண்மை வாழ்விலிருந்து தங்களை அந்நியப்படுத்துகின்றார்கள் என்பது உண்மை.

3. போட்டியும், சுயநலமும் :

தான் தான் என்னும் நிலையும், போட்டியுடன் கூடிய பொறாமையும் இளைஞர்களிடையே தலைதூக்குகின்றது. போட்டி மனப்பான்மை எப்போதுமே சுயநலத்தை வளர்க்கும் என்பது உண்மை. போட்டியின் கோட்பாடே தான் வெற்றி பெற வேண்டும். விளையாட்டில், படிப்பில் ஆரம்பிக்கும் போட்டி இளைஞர்களிடத்திலே அத்தனை துறைகளிலும் சுயநலத்தோடு கூடிய போட்டியாக மாறுகின்றது.

4. தொலைக்காட்சி :

தமிழ், ஆங்கிலம், ஹிந்தி... ஆகிய மொழிகளிலே வெளிவரும் திரைப்படங்கள், இவர்களை மெய்மறக்கச் செய்கின்றன. உண்மையிலே இவற்றினூடாக மனித மாண்பும், மனித சிறப்பும் சிதைவடைந்து உறவுகளுக்குள்ளே உடைசல்கள் ஏற்படுகின்றன. குறிப்பாக அடிமைப்பட்ட ஒரு இளைஞர் சமுதாயம் விடுதலை இல்லாமல் முடங்கிக் கிடக்கின்றது. ஆனாலும் திரைப்பட கலாச்சாரத்தை முற்றுமுழுதாக இல்லாமல் செய்து புதிய அர்த்தத்தை கொடுக்க முடியாது.

ஆகவே என்ன செய்ய வேண்டும்?

இந்தக் கேள்விக்கான ஒரு விடையின் பரப்புதலை இங்கே கொடுப்பது பொருத்தமாகும். எம் இளைஞர்களை நல்வழிப்படுத்த வேண்டும். அதற்கான ஒரு மறைக்கல்வி முறையையும், தேவையையும் நிலை நிறுத்த வேண்டும்.

1. அணுகுமுறையும், வழிவகைகளும்

சமுதாயத்திற்கு இளஞர்கள் முகம் கொடுக்கத்தக்கதாக இளஞர்களை அணுகி அவர்கள்

சமுதாய சீர்கேடுகளிலிருந்து விலகி, தெளிவாக வாழ்வதற்கான வழிவகைகளை முறைப்படுத்தி நெறிப்படுத்தி போதிக்க வேண்டும். குறிப்பாக ஒழுக்க இறையியலை முதன்மைப்படுத்தி தெளிவான விளக்கங்களை இளைஞர்களுக்கு கொடுக்க வேண்டும்.

2. அடிப்படை விசுவாச உண்மைகள்

அடிப்படை விசுவாச உண்மைகளை இறைவார்த்தை ஊடாக வெளிப்படுத்தி இளைஞர்களின் ஆன்மீக தேடலை ஓரளவுக்காவது பூர்த்தி செய்ய முனைய வேண்டும். காரணம் ஏன்? எங்கே? எப்போது? உண்மையாக நடந்ததா? இது நடந்திருக்குமா? இவற்றை நம்ப முடியுமா? போன்ற விசுவாசத்தை விலைபேசும் வினாக்களுக்கு தகுந்த விளக்கமளித்து இளைஞர்களை நெறிப்படுத்த வேண்டும்.

3. இயேசுவின் போதனாமுறை

இளைஞர்களை நெறிப்படுத்த அத்திவாரமாக அமைய வேண்டிய அடிப்படை நிலை இயேசுவின் போதனாமுறை குறிப்பாக அன்றாட, யதார்த்த, நிதர்சன நிகழ்வுகளூடாக இளைஞர்கள் வீதிகளிலே நடக்கும் விதண்டாவாத, அசௌகரிய நிகழ்வுகளை கண்கூடாக காணச் செய்து, அதனூடாக ஒரு தெளிவை உணரச் செய்ய வேண்டும். இயேசு வீதிக்கு வந்து யதார்த்த நிகழ்ச்சிகளைத் தொட்டுப் பேசினார். சீடர்களும், பின் தொடர்ந்தனர். இதை அடிப்படையாகக் கொண்ட உணர்வாலே இளைஞர்கள் தம்மை மாற்றிக்கொள்ள நாம் இளைஞர்களை ஊக்குவிக்க வேண்டும்.

4. மனித இயல் மறையறிவு முறை :

மனிதனை மையப்படுத்திய அதாவது சூழமைவுக்கு ஏற்ப மறையறிவைப் போதிக்க வேண்டும். சூழலின் பல்வேறு பக்கங்களையும் உற்று நோக்கும் ஒரு அழகான பக்குவம் இளைஞர்களுக்குள்ளே உருவாக ஒத்துழைக்க வேண்டும். குறிப்பாக வாழ்வின் சவால்களை ஏற்றுக்கொள்ளும் பக்குவத்தை சொல்லிக் கொடுத்து, அனர்த்தமான நிகழ்வுகளுக்கெல்லாம் விடையைத் தாமே கண்டு கொண்டு உண்மைக் கிறிஸ்தவ வாழ்வின் அர்த்தத்தை இளைஞர்கள் புரிந்து கொள்ள உதவ வேண்டும்.

நான் யார்? என் வாழ்வு எப்படிப்பட்டது என்று தன்னைப் பற்றி இளைஞன் சிந்திக்கும் வாய்ப்பை ஏற்படுத்தி, அவனுக்கும் அயலானுக்கும் இறைவனுக்கும் உள்ள உறவின் தெளிவை இளைஞன் விளங்கிக் கொண்டு செயல்பட மறையறிவினூடாக கற்றுக் கொடுக்க வேண்டும்.

5. சமூகவியல் முறை

மனிதன் ஓர் சமூகப்பிராணி, படைப்பால் நல்லவன், மாண்புடையவன். இயல்பிலேயே சமூகத்தில் வாழ அழைக்கப்படுகின்றான். சமூகத்திலே வாழும் இளைஞன் எப்படியும் வாழலாம், இப்படியும் வாழலாம், எல்லாவற்றையும் அனுபவிக்கலாம் என்கின்ற அசமந்த

போக்கிலே வாழாமல் இப்படித்தான் வாழவேண்டும் என்ற ஒரு வடிவமைப்பை இளைஞன் வளர்க்க உதவிசெய்வது நமது கடமை. சமயம், மொழி, இனம், பொருளாதாரம், அரசியல் போன்ற கூட்டமைப்பிலே ஒரு சமூக மேம்பாடு நிலைக்கும் போது ஒரு நிலையான ஒற்றுமையையும், நல்லிணக்க உணர்வுகளையும் இளைஞர்கள் அறிய வேண்டும். இந்த நல்லிணக்க மேன்மையை, ஏற்றுக்கொள்ளும் மனநிலையை, மன்னிக்கும் பக்குவத்தை மறை அறிவின் ஊடாக இளைஞர்களுக்கு தெளிவாக்க வேண்டும். அன்பின் வழியை ஆழப்படுத்தி, ஆண்டவன் இயேசுவின் வாழ்வை இயல்பாகப் பிரதிபலிக்கச் செய்து மற்றவர்களுக்காக வாழும் வாழ்வின் பக்குவத்தை இளைஞர்கள் காணச் செய்ய வேண்டும்.

இறுதியாக :

இளைஞர்களுக்கு மறைக்கல்வியை வாழ்வோடு போதிக்க வேண்டிய ஒரு கடமை இருந்தாலும் இதற்குப் பல சவால்கள் உண்டு என்பதை நாம் உணர வேண்டும். சவால்கள், எதிர்ப்புக்கள், வேண்டாத சொற்கள் வரும் என்று பின்னோக்கி சவால்களை நகர்த்துவது என்பது சவால்களுக்கு முகம் கொடுக்க நாம் அஞ்சுகிறோம் என்றாகி விடும்.

ஆகவே!

தொடர் பயணமாக இளைஞர்களுக்கு பின்சென்று அவர்களின் தேவையை, குடும்பத்தில், சமூகத்தில், திருச்சபையில் உணரச் செய்வது எம் எல்லோருடைய கடமையும், பொறுப்பும் ஆகும்.

இளைஞர்களுக்கான மறைக்கல்வி வெற்றியளித்தால் சமூகம் விழி திறக்கும் அதன்பின்
திருச்சபை வளம் பெறும்
உலகம் புத்துயிர் அடையும்.
முடிவாக!
எம் திருத்தந்தை 16ம் பெனடிக்ற் அவர்களின் இளைஞருக்கான வரிகள்
இளைஞர்களே!
இயேசு உங்களை சிறப்புடன் அழைக்கின்றார்...!
எதற்காக!
உங்கள் தனிப்பட்ட வாழ்வை
ஆழமாகச் சுவைத்து வாழ்ந்திட அழைக்கின்றார்.

இன்றைய உலகில், நிறைவான விடுதலையின் பலன்களைப் பெருக்கிடும் வண்ணமாக நீவிர் வல்லமையுடன் வாழ்ந்திட அழைக்கின்றார்

திருவருட்சாதனமாம் திருமணத்தை ஏற்றிடும்போது, அதனைப் பிரமாணிக்கத்துடன் இறுதிமட்டும் உறுதியாய் வாழ்ந்திட, அழைக்கின்றார்.

நற்செய்திப் பணியாளராகவோ, துறவியராகவோ, குருவாகவோ.. அர்ப்பணஞ் செய்ய விளைந்திடும் போது தியாக மனதோடு ஏற்று, வாழ்ந்திட அழைக்கின்றார்

இறையாட்சியின் விழுமியங்களாகிய நீதி, சுதந்திரம், அன்பு ஆகியவற்றையும் தவறாமல் இறுதிவரை கடைப்பிடிக்கும் வண்ணமாக வாழ்ந்திட அழைக்கின்றார்

சிரமங்களும், சிக்கல்களும், சிலுவைகளும், எதிர்ப்பட்டாலும் தயக்கங்களை மேற்கொள்ளாது, இலட்சியக் கனவுகளை நனவாக்கும் வண்ணமாக வாழ்ந்திட அழைக்கின்றார்.

(2010, மார்ச்சு - 28)


உதவிய நூல்கள்

இளமை இருக்கும்போதே - ஜெரி

யார் இந்த இயேசு - அருட்திரு. பவுல் லியோன் வனுவேல்

உரிமைகளுடன் - ஜெரி

மலரும் பருவம் - பிலிப் இம்மாகுலேட்

விழுதுகளாகட்டும் விழுமியங்கள் - ராக்ஸி

தோழன் ஆகஸ்டு 2010


இறையியல் கோல வாசகர்களே!

உங்களது ஆதரவிற்கும் வாசிப்பு ஆர்வத்திற்கும் எமது மனமார்ந்த பாராட்டுக்களும் நன்றி கலந்த வாழ்த்துக்களும். சில தவிர்க்க முடியாத காரணங்களினால் முக்கியமாக நிதிப்பற்றாக்குறையினால் காலாண்டு இதழாக பிரசவிக்கும் எமது இறையியல் கோல சஞ்சிகை இந்த இதழிலிருந்து அரையாண்டு சஞ்சிகையாக பிரசுரிக்கப்படும் என்பதை அறியத்தருகின்றோம்.

நிர்வாகம்.

# மறைக்கல்வி ஆண்டை முன்னிட்டு இன்றைய சூழலில் மறைக்கல்வியும் வாழ்வும் என்னும் கருப்பொருளில் மறையாசிரியர் ஜெயசீலன் அவர்களுடன் ஒரு சில நிமிடங்கள்

**கேள்வி 1 :-** ஆர்வத்தோடும் துடிப்போடும் உங்கள் பணியை ஆரம்பித்த காலத்திலிருந்து இன்றுவரை ஒரு பரந்துபட்ட அனுபவ அறிவை நீங்கள் பெற்றிருக்கிறீர்கள் அந்த அறிவோடு இன்றைய சமுதாயத்திற்கு மறைக்கல்வி என்றால் என்ன என்று கொஞ்சம் கூறுவீங்களா?

பதில் :- மறைக்கல்வி என்பது ஒரு மனிதனின் பிறப்புமுதல் இறப்பு வரை தொடர வேண்டிய விசுவாச வாழ்வின் பயிற்சியாகும். கிறிஸ்தவ கோட்பாடுகளை எல்லா வயதினரும் தெளிவாக, முறையாக கற்று கிறிஸ்துவாக உருமாறுவது. இயேசுவை யார் என்று அறிந்து அவருக்காக, அவராக வாழப்பழகுவது. இதற்கு உதாரணமாக எம்மாவுஸ் சென்ற சீடர்கள் உயிர்த்தஇயேசுவிடம் பெற்ற மறைக்கல்வியாகும். தெளிவுற்று ஒன்றும் புரியாது குழம்பிய நிலையில் இயேசு மறையாசிரியனாக மாறி அவர்களுக்கு உண்மையை புரிய வைக்கிறார். அதனால் அவர்கள் இயேசுவைக் கண்டு சாட்சியம் பகர்கிறார்கள். விவிலியம் முழுவதும் மறைக்கல்வி போதிக்கும் நிகழ்வுகளை பார்க்கலாம்.

**கேள்வி 2 :-** இன்றைய நவீன தொழில்நுட்ப கலாச்சாரத்தில் வாழ்கின்ற எம்மவர்கள் மறையறிவை எவ்வாறு புரிந்து கொள்கிறார்கள். என்பது பற்றி சில கருத்துக்கள் சொல்ல முடியுமா?

**பதில் :-** வெளிப்படையாக, ஒரே வசனத்தில் சொல்லப்போனால், இன்றைய சூழலில் மறையறிவை வேண்டாத ஒன்றாகதான் கருதுகின்றார்கள் பலர். சிறுவர் முதல் பெரியவர்வரை நவீனத்துக்குள் அள்ளுண்டு போனவர்களாய், ஆடம்பரம், பணம், மற்றவர்களைப் போல் நாமும் வாழ வேண்டுமென்ற போலி மதிப்பீடுகளால் கவரப்பட்டு எப்படியும் வாழலாம் என்று வாழ்கிறார்கள். மறையறிவு விரும்பாத ஒன்று என்றும் அது வாழத் தெரியாதவர்களுக்கும் மதப்போதகர்களுக்கும் தான் என்று கூறுகின்றார்கள். மறையறிவு பெற கொடுக்கப்படுகின்ற நேரங்களை வேறு செயல்பாடுகளுக்குக் கொடுக்கிறார்கள். மதம், மறையறிவு மக்களை மயக்க நிலையில் வைத்திருக்கும் என்று கூறுபவர்களும் எம்மிடையே உண்டு. மேலும் மறைக்கல்வி கவர்ச்சியற்ற ஒன்றாக இருக்கிறது என்பதால் அது மக்களை கவரவில்லை.

**கேள்வி 3 :-** உங்களுடைய பணிவாழ்வின் ஆழமான அனுபவத்தோடு வாழ்ந்து கொண்டிருக்கும் நீங்கள் உங்களது சிறுபராயத்தில் பெற்ற மறையறிவு அனுபவங்களை பகிர்ந்து கொள்வீர்களா?

**பதில் :-** நிச்சயமாக நம் ஒவ்வொருவருக்கும் நாம் இளமையில் கற்ற மறைக்கல்விதான் நமது நம்பிக்கை வாழ்வுக்கு அடித்தளமாக அமைந்துள்ளது. ஏனெனில் மறைக்கல்வி வாழ்வோடு நெருங்கிய தொடர்புடையது. இப்பவும், நான் இளமையில் பெற்ற மறைக்கல்வி என் அடிமனதில் பசுமரத்தாணி போல் பதிந்துள்ளது என்றால் அது மிகையாகாது.

எங்களுடைய சிறுவயதுக்காலத்தில் பாடசாலைகள் அரசாங்கம் எடுக்காத காலம். எனவே ஒவ்வொரு பாடசாலையிலும் சிறந்த கத்தோலிக்க ஆசிரியர்கள், அருட்கன்னியர்கள் கற்பித்தார்கள். பாடசாலையில் முதலாவது பாடம் சமய பாடம். எனவே சமய அறிவு சிறப்பாக போதிக்கப்பட்டது. ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் திப்பலி நடைபெறும். அதற்கு முதல் பாவசங்கீர்த்தனம் கேட்கப்படும். வழிபாடுகளில் ஆர்வத்தோடு பங்குபற்ற வேண்டும் என்பது கடுமையான கட்டளை. இப்படியாக சமய செயற்பாடுகளில் எம்மையறியாமலேயே ஈடுபாடு உடையவர்களாக மாற்றியமைக்கத் தூண்டியது. எமது வாழ்வு பொழுதுபோக்கு எல்லாம் ஆலயத்தையும் ஆலயச் சூழலையும் கொண்டதாக அமைந்திருந்தது. அருட்தந்தையர்கள், அருட்கன்னியர்கள், ஆசிரியர்கள் எம்மை நெறிப்படுத்தும் வழிகாட்டிகளாக செயல்பட்டார்கள். அவர்களுக்கு மதிப்பும் மரியாதையும் கொடுத்தோம். அத்தோடு தொலைக்காட்சி, சினிமா பொழுதுபோக்குகள் குறைவான ஏன் இல்லாத காலம் என்பதால் கிராமங்களில், சிறப்பாக எங்கட ஊரிலும் கிறிஸ்தவ நாட்டுக்கூத்துக்களை, மேடையேற்றுவார்கள், வீடுகளில் பெரியவர்கள் நல்ல சமய கதைகள் சொல்லுவார்கள். இப்படியாகத்தான் நாம் மறையறிவைப் பெற்றோம். மேலும் சிறிய நல்ல சமயப் புத்தகங்களை பங்குத் தந்தையர்கள் தருவார்கள் சிறப்பாக நற்கருணை வீரன் போன்றனவாகும். இவற்றினூடாக புனிதர்கள் பற்றியும் அறிந்தேன்.

**கேள்வி 4 :-** மறைக்கல்வி என்றவுடன் எம்மில் பலர் சிறுவர்களுக்கானதும், திருவருட்சாதனங்களைப் பெறும் தகுதிச் சான்றாகவும் கருதுகிறார்கள். உங்கள் கருத்து என்ன?

**பதில் :-** உண்மைதான். இன்று அநேகமானவர்களின் எண்ணமும் அதுதான். ஆனால் மறையறிவு எல்லோருக்கும் உரியது. பங்குகளில் மறைக்கல்வி சிறுவர்களுக்குரியது அல்ல. அருட்சாதனங்களுக்குமுன் அறியும் ஆயத்த அறிவு என்று நினைக்கிறவர்களுக்கு நான் சொல்வது என்னவென்றால், மறையறிவு என்பது எமது விசுவாச வாழ்வோடு நாளாந்த கிறிஸ்தவ வாழ்வோடு இணைந்திருக்கும் ஒன்று. கிறிஸ்தவ விழுமியங்களோடு வாழ நினைப்பவர்கள் தொடர்ந்து இறையறிவை, மறையறிவை நாடுவார்கள் தேடுவார்கள். எல்லோரும் விசுவாச வாழ்வில் வளர்ச்சியும் பயிற்சியும் பெற வேண்டுமென்தை இவர்கள் மறந்து விடுகிறார்கள். சிறப்பாக சொல்லப்போனால் பெரியவர்களுக்கு வேண்டியது திருவிழா கொண்டாட்டங்களும், வெறும் சடங்குகளும் மட்டுமே. அதுவும் அதன் அர்த்தங்கள் தெரியாது பழக்கதோசத்தில் சடங்குகளைச் செய்கிறார்கள். எல்லோருக்கும் தெரியாது என்று நான் சொல்லவரவில்லை. தெரியாதவர்களும் உள்ளார்ந்த அர்த்தங்களை சடங்குகள் தருகின்ற பக்தி வழிமுறைகளை அறிந்து செய்தால் இன்னும் மேன்மையானதாக இருக்கும் என்று நான்

நினைக்கிறேன். பெரியவர்கள் இதைப் புரிந்து கொள்ளுதல் அவசியம். அப்போதுதான் தம் பிள்ளைச் செல்வங்களுக்கு, தாங்கள் அறிந்த, வாழ்கின்ற கிறீஸ்தவ விழுமியங்களை சொல்லிக் கொடுக்க முடியும்.

**கேள்வி 5 :-** உங்களுக்கு தெரிந்தமட்டில் யாழ் மறைமாவட்டத்தில் இன்று மறைக்கல்விப் பணிகள் எவ்வாறு நடைபெறுகின்றன என்று கூறுவீர்களா?

**பதில் :-** யாழ் மறைமாவட்ட மறைக்கல்வி நடுநிலையத்தில் பணிபுரிகின்றவன் என்ற முறையில் எமது பணிகளை உங்களுக்கு விளக்குவதில் மகிழ்வடைகிறேன். எமது மறைமாவட்டத்தில் மறைக்கல்விப் பணி பல்வேறு மட்டங்களில் பல்வேறு வடிவங்களில் நடைமுறைப்படுத்தப்படுகிறது. பங்குகளிலே தரம் ஒன்றுமுதல் தரம் பதினொன்று வரை பங்கு மறைக்கல்வி ஞாயிறு தினத்திலும் சில இடங்களில் வசதிக்கேற்ப வேறு நாட்களிலும் நடைபெறுகின்றது. மேலும் திருப்பாலர் சபையூடாக மறைக்கல்விப்பணி மேற்கொள்ளப் படுகிறது. பக்திசபைகள், இளைஞர் மன்றங்கள் ஊடாக வளர்ந்தோர் மறைக்கல்வி போதிக்கப்படுகிறது. வழிபாடுகளில் ஆற்றப்படும் மறையுரை ஒரு சிறந்த மறைக்கல்வியாகும்

எல்லாவற்றிற்கும் முதுகெலும்பாக மறைக்கல்வி நடுநிலையம் செயற்படுகிறது. காலத்திற்கு காலம் பங்கில் பணிபுரிய மறையாசிரியர்களுக்கு மூன்று மாதப் பயிற்சி வழங்கப்படுகிறது. அதைவிட பங்கு மறையாசிரியர்களுக்காக புத்தூக்க வகுப்புக்கள், கருத்தரங்குகள் நடாத்தப்படுகின்றன. புதுநன்மை, உறுதிப்பூசுதல் பாசறைகள் நடாத்தப்படுகின்றன. ஒவ்வொரு ஆண்டும், பாடசாலை மறைக்கல்வி பரீட்சை, விவிலிய வினாவிடைப் போட்டிகள், மறைமாவட்ட ரீதியாக நடாத்தி அதிக புள்ளிகள் பெறுவோருக்கு சான்றிதழ்களும், முதலிடங்கள் பெறுவோருக்கு பரிசுகளும் வழங்கப்படுகின்றன.

மேலும் பங்குகளில் சில பங்குத் தந்தையர்கள், மறைக்கல்விக்கு முக்கியத்துவம் கொடுத்து அருட்சாதனங்கள் பெறுவதற்கு முன் மறைக்கல்வியை போதிக்கிறார்கள். எல்லோரும் மறையறிவைப் பெற பல வசதிகள் செய்கிறார்கள். சிறப்பாக கண்காட்சி, பட்டிமன்றம், கருத்தரங்குகள், நாடகங்கள் போன்ற ஊடகங்களைப் பயன்படுத்துகிறார்கள் மறைக்கல்வி தொடர்பான தொலைக்காட்சிப் படங்களை மக்களுக்கு காண்பிக்கிறார்கள் இப்படியாக பங்கில் மறைக்கல்வி கற்பிக்கப்படுகிறது.

**கேள்வி 6 :-** இன்றைய சூழலில் மறைக்கல்விப் பணி எதிர்நோக்கும் சவால்கள் என நீங்கள் கருதுபவை எவை?

**பதில் :-** நிச்சயமாக அதைப்பற்றி கூறவேண்டிய தேவையும் அவசியமும் இருக்கிறது. நாம் எத்தகைய இடர்பாடுகளுக்குள் பயணிக்கிறோம் என்பது அறியப்படவேண்டியது. மறைக் கல்விப் பணி எதிர்நோக்கும் சவால்கள் என ஒரு சிலவற்றை நான் அடையாளப் படுத்துகின்றேன். இன்று மறையாசிரியர்கள் என்று ஆர்வத்தோடு தியாக சிந்தையோடு பணிபுரிபவர்கள் மிகவும் குறைவு. ஆர்வமும் தியாகமும் இருப்பவர்களும் இருக்கிறார்கள்,

ஆனால் குறைவு என்றே நான் கூறுவேன். அடுத்ததாக மறைக்கல்வி நடுநிலையமும் பங்கும் எதிர்நோக்கும் சவாலாக இருப்பது என்னவென்றால் மூன்றுமாத பயிற்சி வகுப்புக்களுக்கு வரும் அல்லது பயிற்சி பெற்றுச் செல்லும், மறைக்கல்வி ஆசிரியர்கள் நின்று நிலைத்து பணி செய்வது குறைந்தது ஆறு மாதங்களோ, ஒரு வருடமோ தான். இதற்கு பல்வேறு காரண காரியங்களை அடுக்கிக் கொண்டே போகிறார்கள். எவ்வாறென்றால், பயிற்சி வகுப்புக்கு வருபவர்கள் பொதுவாக இளம் பெண்கள். அவர்கள் திருமணம், குடும்பம் என்று இணை கிறபோது மறைக்கல்விப் பணிக்கு வருவதில்லை, கேட்டால் குடும்ப அலுவல்களைக் கவனிக்க வேண்டும் என்பதாகும்.

பங்கு தளங்களில்ஆண் பிள்ளைகளுடைய செயற்பாடுகள் கூடுதலாக கொண்டாட்டங் களுக்கு அலங்கரிப்பது இப்படி இதர வேலைகள் செய்வது மாத்திரம் தான் அவர்கள் பணி என நினைக்கிறார்களோ என எண்ணத் தோன்றுகிறது. படித்த வாலிபர்கள் ஏன் இன்னும் குடும்பத்தவர்கள் மறைக்கல்விப் பணியை நடாத்தலாம்.

இன்னும் சிறப்பாக சொல்லப்போனால், பங்கு மட்டங்களில் பணிபுரிகின்ற அருட்பணிச்சபை உறுப்பினர்கள், தங்களுடைய பங்கு சார் மறைப்பணியை வளர்க்க தமது பிள்ளைகளையும் ஏன் தாங்களே முன்வரும் போது, பங்குத்தந்தைக்கும் இப் பணியைச் செய்வதற்கு இலகுவாக இருக்கும். இந்த வேளையிலே ஆர்வத்தோடும் தியாக சிந்தையோடும் மறைப்பணி புரிகின்ற அனைவரையும் நான் பாராட்டுகின்றேன். வாழ்த்துக் கூறி நிற்கின்றேன்.

(இதுவரை நேரமும் எங்களோடு உங்களை அர்ப்பணித்து உங்கள் மறைக்கல்வி வாழ்வின் அனுபவத்தை பகிர்ந்ததற்காக இறையியல் கோலங்கள் இதழ் சார்பாக நன்றி கூறுகிறேன்.)

நேர்காணல் :- அருட் சகோ. வே. ஜஸ்ரீன் அமதி

# SYNOPSIS

## St.Peter Canisius (1521- 1597)

When we are celebrating the Year of Faith at the end of the 50 years of Vatican II Council, it is better to think of a saint who laboured heart and soul to spread the faith of the church. That is, not any other than St. Peter Canisius, the son of wealthy parents was born, in the very year that Luther left the Church, in Switzerland in 1521. At 15 he was already studying at the University and at 19 received his Master's degree. Three years later he became the first German to enter the Society of Jesus. In the year 1546 he was ordained a priest.

Since he was an educated person, as a theologian he was asked to be present at the great Council of Trent. After spending some months in Rome, he was sent to Vienna by his superior and the founder of his congregation St. Ignatius Loyola. There he taught at the University, preached in the Cathedral and laboured in every way to restore the true Catholic doctrine.

Being firmly convinced that many had followed out of ignorance he kept himself free (in contrast to the protestants) from all narrow minded spitefulness and with personal conviction. His exemplary humility and moderation made him the most influential leader of the counter reformation in those lands. This kind of attitude made him the second apostle of Germany. On this travel throughout this great territory he promoted the habit of reciting the Holy Rosary and encourage the writing and printing of good books. He founded some 30 schools and Papal Seminaries in order to form an instructed laity and a devoted clergy. Thousands were won back to the faith and crowds surrounded his confessional.

Besides his ascetic and homiletic writings he is most famous for his book 'Catechism' for children, young people and adults, which even in his life time saw 200 editions in 12 languages. This faithful servant of God died in Switzerland on 21st December 1597, was canonized and made a Doctor of the Church in 1926 the first time these honours were bestowed simultaneously.

# A view of the church's doctrine regarding the need of catechesis for everyone.

The teaching of religion today, in a changing cultural milieu, presents many challenges. Catechesis helps one to nourish and bring to maturity the seed of faith implanted at baptism by the Holy Spirit. It is not a need only for children and the young but also for Catholics of all ages and in all walks of life. It is essential for Christian formation and also helps one to understand Christian doctrine and to apply them to life situations especially at a time when worldly knowledge and advances in technology are making an impact on their lives. It will help them to evaluate them in the light of God's word.

The church has adopted various methods to impart the good news of Christ to others. In the present day it is imperative that proper approaches are made to bring Christ into everyone's life. In short, knowledge of religion should enable a Christian to be alive, edifying and happy to serve others as the light and salt of the earth.

## Forms of art in catechism

We know how religious beliefs can be taught through Art and Literature. Catechism teaches us religious beliefs and faith with the cultural background in a more understandable manner. Thus catechism helps in proclaiming the Gospel to the ends of the earth. In order to proclaim the Gospel we should know more and understand clearly. To easily grasp and understand it, forms of art play a better role.

In one way, Art itself presents the religious feelings and emotions and on the other, it helps to proclaim the religious beliefs and faith. Jesus himself uses the literature form of parables to explain the truths of the Kingdom of God.

Many forms of art like music, art, sculpture and drama are promoted in church to proclaim the Gospel truths. 'The last judgment' and the 'Pieta' monument of the world famous Artist Michael Angelo which belong to the 16th Century A.D. are some of the classical examples of Art in Catechism. From the time

of the European priests in Sri Lanka hymns, folk play, and drama were very common means of Catechism

## Usage of posters in catechizing adults

In the modern world advertisements play a very important role. There is no business without advertisement. Poster is a kind of advertisement. This poster is stuck on walls and hung on a place where people gather. This poster attracts the people and urges them to think or to go for the things they advertise. These posters are used not only in business but also in other activities as a medium. These posters are also helpful to carry out the Good News of Jesus and to catechize the elders.

In this year of Catechism our main task is to give catechism to all. For this ministry the use of posters becomes essential and helpful. Finding time for learning about our religion and faith is a problem especially for the elders. So it is our duty to make the alternative arrangements to give them catechism. The clever way of a catechist is to give the important teaching in three or four sentences which could be easily understood by the elders.

The 72 books of the Holy Bible can be put in one word, Salvation or the History of the Kingdom of God. As Jesus begins his public ministry he used miracles, parables and other incidences which are very brief at the same time full of meaning. These methods were a kind of posters at that time. John the Baptist, in order to prepare the way for the messiah, used posters in various ways, even he himself is a poster signifying the Messiah.

The authors of the Bible used various methods to put forward their teaching. These teachings should become the key words in posters and then only the elders will understand them very easily.

The evangelists of the four Gospels used their own way of teaching methods to bring out their messages. The purpose of the Gospel of Mark is to introduce Jesus to the suffering gentiles. Jesus, Son of God is the Suffering Servant' was his key teaching. Through Baptism we are called children of God. So we have to walk with Jesus even in our sorrows and joys. This message is clearly affirmed in the Gospel of Mark.

It is very evident that the usage of posters will play an important role in the catechism of the elders. These posters will touch the hearts of the elders and they will be able to foster their faith and their knowledge of God

# A Brief Note on Catechists and their training involved.

The need and the necessity of catechists in the ministry of proclaiming the Good news of Christ was realized not after many years of Jesus' life, death and resurrection. Instead, the beginning of the mission was already inherent in the time when Jesus lived and preached, especially with the selection of His disciples. He, himself calls them and entrusts his mission, empowering and instructing them. With the foundation laid by St.Peter and St.Paul in the early churches, the laity played a great role for the growth of the deep faith in the lives of the early Christians. Even after the appointments of leaders of the small churches among the laity, St.Paul found himself as one of them, in guiding and strengthening in all their moments of isolations, frustrations and hopelessness etc. which tried to take them away from their deep faith and to safeguard the seeds of faith implanted among the faithful. The letters written by St. Paul to the leaders of the small churches and to the communities related to different circumstances illustrates, how they were instructed and directed in their ministry of proclaiming the Good News, the mission left behind them.

The one who comes forward with great desire and courage to proclaim to all, the Good News of Christ in which the church strives to find fulfilment and to witness one's personal God experience in any time is said to be a great example for a catechist.

In the changing world of today, with lot of advancements, the ministry of catechists in evangelization is inevitable. In the church today a number of the faithful are ignorant of the fundamental teachings of the church, the Christian mystery of the faith which faithfully presents the teaching of Sacred Scripture and the living tradition of the church.

Many reasons can be listed for these consequences. In fact, the fundamental cause for these impacts are the inadequacy in the number of catechists, lack

of interest to learn and to teach the religious education, the irresponsibility among both the laity and the church leaders concerned in educating the faithful and having insufficient knowledge about the teaching of the church and the lack of well-organized training among the catechists.

It is the obligation of the church to find the talents and the skills hidden among catechists and forming them according to the need and make them work for the growth of the church. Adequate attention should be paid to the needs of a catechist in all his life situation, especially, in their moments of difficulties and hardships.

## Catechism through media

The Tamil Dioceses have jointly declared the year 2012as the "Year of Catechism". In this stage, it is very suitable to share the thoughts how to make this knowledge reach the students. Here we think how to make the theme of catechism to all. The arrivals of Internet and Website have made many unthinkable things a reality.

While the announcement of catechism through media has made a great growth, the arrivals of computer has made the great change in the press media. The method of composing with hands has changed with computers. New method of printings has been introduced. Thus, the new arrivals of Medias are only to simplify but not to destroy. We can say briefly that the old Medias that found slow growth have reached a great growth by the arrival of new Medias. More over it joined the old Medias with it and has created a convergent journalism. In the 1990 those who learned (HIML CODING) language only could enter that world. But today, that kind of condition has entirely changed and one can create an internet on his own.

When we look at the activities of "Holy Father Pope Benedict XVI, we can clearly see that he uses Medias particularly social Medias a lot for his evangelization. There is no doubt or question that these modern internet facilities can be a useful hobby and knowledgeable instrument to those who waste their time and making chaos among their societies. Social Medias can make great changes in society and especially among youth.

It is a compulsory need of the present time that we should make changes from our habits and formalities according to the modern world with the help of modern technologies. The students of the modern world guided properly can make a great growth by using internet facilities which are available at present.

## Sunday catechism and tuition classes

Catechesis is based on the Word of God. We need to be instructed by faith that impels a holy life, all throughout our life. Parents play a vital role in this gradual progress. This growth forms a mature Christian who could face the challenges of life and deepen his or her faith on the light of life giving Word. Unfortunately, the parents of modern day tend to give more importance to the secular studies than the catechism without knowing the value of catechism. This could lead to a generation who would devalue the morality, abandon their faith and strays with atheistic tendencies. Therefore, knowing the foreseen danger let all of us feel the necessity of catechism and inform our children the faith based on the life giving Word.

## The necessity to realize the need of Religious education (Catechism) among youth today

The well-defined form in terms of the leadership of youth is not that they are the leaders of tomorrow but the youth of today are the leaders of today. Any achievement or completion towards fruitful ends are through making efforts and attempts in any sphere of one's life, fundamentally depend on how one faces the challenges that come to him/her. Likewise, the right attitude that one has in facing challenges play a great role for a steady leadership. Today, the youth are very much expected to be well-prepared for that: in the strict sense of the word today, the youth have become unwanted, hated, as well as considered to be evil to the society.

Today, the youth are said to be the cause for all the disorders and crimes spread and found in the world at present. However to be genuine one would say that the unwanted conduct and the dark side of today's youth is basically because of the lack of well oriented personal growth, following the footsteps of wrong models and going beyond the principles and doctrines only achieved by the world or in the absence of God, in the total negation of the religious education (catechism). Therefore, the ends or the results are all about failures, conflicts and disappointments in all their efforts and attempts.

Today globalization has become the object of serious discussion for it has failed to give a concrete foundation to the spiritual and religious realms among the people, especially today, youth have failed to understand that the rapid spread of technology which promotes mechanical and scientific mentality devoid of personal and ethical values. Instead, they have become addicted to electronic media, specially cinema which orient itself only in stimulating the sexual desires and violence among youth through its products as well as the addiction to drugs. Today youth are also the victims of consumerism which reduced religion to one of the many consumer goods. Consumerism, giving negative effects among youth, betrays lack of spiritual vision and experience in youth. Unhealthy competition and over selfishness among youth lead them giving harmful results towards entire corruptions.

Therefore, to make them aware of the worth of their lives and realize the truth of their lives, they should be well-reminded of their religious education especially the fundamental faith of the church, the Christian mystery of the faith which faithfully and systematically present the teaching of sacred scripture and living tradition in the church and the teaching of Jesus Christ with his life, death and resurrection should lead them to live for a promising future ahead. One should be positively made up in mind to face the challenges as he lives and communicates the positions and the values in the light of the kingdom of God to others.

# A dialogue with catechist Mr. Jeyaseelan on the topic of catechism and life in today's culture

This short dialogue is basically an experiential sharing. How people looked at catechism earlier? And now where catechism stands? The main idea here is that the Christian faithful think that catechism is only for children and especially for people who prepare themselves to receive the sacraments. But catechism is for all and it intermingles in the daily activities of a Christian. Therefore catechism is necessary at all times. The majority of the elders in the parishes involve only in the church's feast and other celebrations and rituals without knowing the real meaning.

In this dialogue a short report is given about the activities of the catechetical centre in the diocese of Jaffna. The catechetical centre is serving as a back bone of the diocese. The centre gives the following services viz; three months training for catechist, renewal programs for students, very specially for youth, several seminars for catechist.etc.

What are the challenges facing catechism in today's scientific culture? The service orientation is lacking today especially among the young catechists. People who receive catechetical training don't persevere, when they get back to their parishes; they say that they have to look after their families and they also say other reasons. Catechist Jeyaseelan is also proposing his idea that if the educated young boys in the diocese take the initiative in the field of catechism, we can have a bright future.

.To promote the Catholic faith and belief the Annual Art exhibition held by the Jaffna Catechetical Centre is a good example. Even films can be made use of to promote the Catholic faith- a beautiful example would be Mel Gibson's film-'The Passion of Christ'. The section on 'Liturgy' in the 2nd Vatican Council and the section on 'Social Communication' deal a lot on how we can make use of all available forms of Art to proclaim the good news to all nations. So there is no doubt that to catechize the religious faith, beliefs and cultural background, Art plays a vital role.

# பொன்விழா பொக்கிஷங்களே...

இவ்வாண்டிலே தமது குருத்துவப் பணிவாழ்வில் 50 ஆண்டுகளை நிறைவு செய்யும் எம் குருமடத்தின் விரிவுரையாளர்களான அருட்தந்தையர்கள் நீ.மரிய சேவியர், ஜி. இ. மேரி ஜோசவ், பி.பி.பிலிப் அமதி ஆகியோருக்கு இறையியல் கோலங்கள் தனது இனிய பொன்விழா வாழ்த்துக்களைத் தெரிவித்து நிற்கின்றது.



அழைத்தவன் வழியிலே
ஐபத்தாண்டுகள்
அணையாத தீபங்களாய்
மங்காத மகுடங்களாய்
மகத்தான பணியாற்றிய -எம்
மாண்புமிகு குருக்களே!

மறை கலை மொழியுடன்
மெய்யியல் இறையியலும்
ஐயம் தீரப் புகட்டிடும்
அன்புடை ஆசான்களே!

ஆன்ம வழி காட்டிடும்
மரியாளின் மைந்தர்களே
உங்களிடம்
அறிவுப் பாலுண்ட
மழலைகள் நாம்
உம்மை

அழைத்தவன் கரம்பற்றி
கலப்பையில் கண்பதித்து
ஆயுள் உள்ள காலமெல்லாம்
இறையாசீர் பெற்று
இகத்தில் பணிகள் பல புரிந்திட
இதயத்தால் வாழ்த்துகின்றோம்...

# இறையியல் கோலங்கள்

தமிழ் இறையியல் காலாண்டு இதழ்
ஆண்டுச் சந்தா உள்நாடு (அஞ்சல் செலவு உட்பட) ரூபா 180/=
வெளிநாடு (அஞ்சல் செலவு உட்பட) U.S.$ 16
Euro 14

தனிப்பிரதி 55/=

தொடர்பு கொள்க:
**இறையியல் கோலங்கள்**
தூய சவேரியார் குருத்துவக் கல்லூரி
கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 021 222 2482, 021 222 7145

# IRAI IYAL KOLANGAL

A Tamil Theological Quarterly
Annual Subscription: Local (Incl. postage) Rs. 180/=
Foreign (Incl. postage) U.S.$ 16
Euro 14
Single Copy Rs. 55/=

Correspondence to:
**Irai Iyal Kolangal**
St.Francis Xavier's Seminary
Columbuthurai, Jaffna,
Sri Lanka.
Tel: 021 222 2482, 021 222 7145

Registered No. QD/14/News/2012